விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை (22.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125




## இலங்கையில் ஐ.நாவின் பணிகளை முடக்குவதற்கு திரைமறைவில் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் பணிகளை முடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பணிகளுக்கான ஒருங்கிணைப்பு செயலகம் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக செயற்பட்டு வருவதாக அரசாங்கம் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனிதாபிமான பணிகளை ஒருங்கிணைக்கும் இந்த அமைப்பானது இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் குறித்து சர்வதேச சமூகத்திற்கு அறிக்கைகளை வழங்கி வரும் நிலையில் இந்த அமைப்பின் சுயாதீன அறிக்கைகளே இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சமூக நெருக்கடிகளை ஏற்படுத்த காரணமாக அமைந்துள்ளதாக குற்றஞ்சாட்டி, (10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல் இளைஞன் பலி; எட்டு பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு நகரில் உள்ள கத்தோலிக்க கோவில் பகுதியில் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார். இரு சிறுமிகள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு நகரின் மையத்தில் கத்தோலிக்க கோவிலாக இருந்து ஆழிப்பேரலை நினைவு மையமாக இருக்கும் பகுதி மற்றும் கரையோரப் பகுதி மீது நேற்று பிற்பகல் 3.50 மணியளவில் விமானக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் ஆழிப்பேரலை நினைவு மையம் மற்றும் அப்பகுதியில் இருந்த வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதில் அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த உகந்தன் (10 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டுத் தலையீடுகளை ஜே.வி.பி. தொடர்ந்து எதிர்க்கும்

### பிரி.தூதுவரிடம் சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டுப் பிரச்சினையில் வெளிநாட்டுத் தலையீடுகளை எதிர்ப்பதாக ஜே.வி.பி. மீண்டும் கூறியுள்ளது. இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் பீற்றர் ஹெய்ஸை நேற்றுச் சந்தித்த போது ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாரட்ணம் அடிகளாரின் மறைவு யாழ்.மறை மாவட்டத்திற்குப் பேரிழப்பு

### யாழ்.ஆயர் இல்லம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் தலைவர் எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளாரின் கொலைக்கு யாழ்.ஆயர் இல்லம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மறை மாவட்டக் கத்தோலிக்கக் குருவும் கிளி.முல்லை மறைக் கோட்டத்தில் பணிபுரிந்தவருமான ம.கருணாரட்ணம் (கிளி) அடிகள் 20.04.2008 அன்று ஞாயிறு திருப்பலியின் பின்னர் மல்லாவி – மாங்குளம் வீதியில் குழந்தை இயேசு கோவிலுக்குச் சமீபமாகக் கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்ற செய்தி கேட்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாரட்ணம் அடிகளாரின் கொலைக்கு விடுதலைப்புலிகள் கண்டித்து அறிக்கை

(கிளிநொச்சி)

வடக்குக் கிழக்கு மனித உரிமை செயலகத்தின் இயக்குநரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் படுகொலைக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்குக் கிழக்கு மனித உரிமை செயலகத்தின் இயக்குநரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் 20 ஏப்ரல் 2008 அன்று மாங்குளம் - மல்லாவி வீதியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரால் நடாத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

மாங்குளம் பகுதியிலுள்ள தேவாலயத்தில் இறை வழிபாட்டினை முடித்துக்கொண்டு கருணாரட்ணம் அடிகளார் தனது வெள்ளை நிற ஊர்தியில் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் பிற்பகல் 12.30 மணியளவில் இவரது ஊர்தி மீது (10 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?





## கருணாரட்ணம் அடிகளார் உடலுக்கு மக்கள் அஞ்சலி

### யாழ்ப்பாணத்தில் இன்று இரங்கல் திருப்பலி

(கிளிநொச்சி)

கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட வடக்கு-கிழக்கு மனித உரிமை செயலகத்தின் இயக்குநரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாரின் பூதவுடலுக்கு மக்கள் கண்ணீர் மல்க வணக்கம் செலுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி குரு முதல்வரின் ஆலயமான புனித தெரேசாள் கோவிலில் வைக்கப்பட்டுள்ள கருணாரட்ணம் அடிகளாரின் பூதவுடலுக்கு பெருமளவிலான மக்கள் திரண்டு வணக்கம் செலுத்துகின்றனர். வவுனிக்குளத்தில் உள்ள கருணாரட்ணம் அடிகளாரின் பங்குக் கோவிலான செபஸ்தியார் கோவிலில் இன்று இறுதி நிகழ்வு (10 ஆம் பக்கம் பார்க்க)



# அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த 65 குடும்பங்கள் நேற்று மீளக் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியிலிருந்து 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோரில் 65 குடும்பங்கள் நேற்று மீளக் குடியமர்த்தப்பட்டன. இது தொடர்பாக ஈ.பி.டி.பி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



2006 ஆம் ஆண்டு தீவகப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலின் விளைவாக அங்கிருந்து இடம்பெயர்ந்து, யாழ்.நாவாந்துறை சென். நீக்கிலஸ் தேவாலயத்திலும் ஓ.எல்.ஆர் தேவாலயத்திலும் தஞ்சம் அடைந்திருந்த 120 குடும்பங்களுள் 65 குடும்பங்களின் 277 அங்கத்தவர் தமது சொந்த இடத்தில் குடியமர சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அம் மக்களை யாழ்.அரச செயலக அதிகாரிகள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர், கடற்படையினர் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் நேற்று காலை 8.30 மணியளவில் அல்லைப்பிட்டிக்கு அழைத்துச் சென்றனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரும் கடற்படை அதிகாரிகளும் மீள் குடியேறும் மக்களுக்கு குளிர்பானம், பிஸ்கட் கொடுத்து வரவேற்றனர்.

மீளகுடியமரவுள்ள மக்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதுடன் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட உள்ளன.

மேலும் இம்மக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க இரண்டு நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவதை மேலும் ஒரு நாளுக்கு நீடிக்கும்படி யாழ்.மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் அரச அதிபரிடம் கேட்டுள்ளார்.

யாழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் வேலணை பிரதேச செயலர் இம் மக்களுக்கு மூன்று நாட்களுக்கு சமைத்த உணவு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.

மக்களின் ஏனைய அனைத்து விடயங்களும் எதிர்கால வாழ்வாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இம்மக்களுக்கான உதவிகளை செய்வதாக, இந்நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் வேலணை பிரதேச சபை தலைவர் கருணாகரகுருமூர்த்தி (மோகன்) தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஊர்காவற்றுறை பொறுப்பாளர் காந்தன், விசேட பிரதிநிதி வதிமகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மற்றும் யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் மற்றும் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வேலணை பிரதேச சபை அதிகாரிகள், தனியார் தொண்டு நிறுவன ஊழியர்கள், கடற்படை அதிகாரி பீரிஸ், அல்லைப்பிட்டி கடற்படை அதிகாரி ஜெயசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தந்தையும் மகனும் நேற்றுச் சரண்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக தந்தையும் மகனும் யாழ் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் நேற்றுச் சரணடைந்துள்ளனர். சரணடைந்தவர்கள் கைதடி, நுணாவில் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சரணடைந்த இருவரையும் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ச-2)

## சந்தேக நபர்கள் 8 பேர் கைது

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மீதான குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் எட்டுப்பேர் குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் திட்டம் தெஹிவளை அத்திட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்தே மேற்கொள்ளப்பட்டதாக ஆரம்பக் கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக குற்றத்தடுப்பு புலனாய்வுப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

குண்டுத் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரி அந்த வீட்டில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-5)

## கருணாரட்ணம் அடிகளாருக்கு யாழில் இன்று இரங்கல் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செலயகத்தின் இயக்குநர் அருட்திரு. எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளாரின் இறுதி நிகழ்வு இன்று நடைபெறும்.

யாழ்.மரியன்னை பேராலயத்தில் மாலை 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ்.ஆயர் இல்லம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் மதியம் வவுனிக்குளத்தில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ்.மறைமாவட்ட குருவாகிய அருட்திரு. எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளாரின் திருவுடல் இறைமக்களின் அஞ்சலிக்காக கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இவரின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இரங்கல் திருப்பலி கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு மாலை 3.30 மணிக்கு வவுனிக்குளம் புனித வேளாங்கன்னி ஆலய வளாகத்தில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ளதாக யாழ்.ஆயர் இல்லச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேலும் அடிகளாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்ற முடியாத குடாநாட்டு வாழ் இறை மக்களுக்காக யாழ்.மரியன்னை பேராலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என அச் செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது. (ச)

## இலங்கைப் பிரச்சினை தொடர்பில் அ.தி.மு.கவின் ஆதரவை பெறுங்கள்

## வைகோவுக்கு கருணாநிதி சவால்



(சென்னை)

தி.மு.க. ஆட்சியை அகற்ற முதல் இலங்கைப் பிரச்சினை மற்றும் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பில் தனது தோழமைக் கட்சியான அ.தி.மு.கவின் ஆதரவை பெறட்டும் என வைகோவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்டுகளை விமர்சிக்கும் துணிவு முதல்வருக்கு உள்ளதா என பா.ஜ.க தலைவர் இல.கணேசன் கேட்டுள்ளதற்கு பதிலளிக்கும் முகமாக கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

விலைவாசி உயர்வு குறித்து கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தபோது அதற்காக வருத்தப்படுகிறேன் என்றும் வெளிநடப்பு செய்தது பொருத்தமானதல்ல என்றும் பேரவையிலேயே விமர்சித்திருக்கிறேன்.

தி.மு.க ஆட்சியை அகற்ற அ.தி.மு.கவுடன் இணைந்து மக்கள் சக்தியை திரட்டப் போவதாக வைகோ கூறியுள்ளார். சேது சமுத்திரத்திட்டம், இலங்கைப் பிரச்சினை போன்றவற்றில் அவருடைய தோழமைக் கட்சியான அ.தி.மு.கவின் ஆதரவைப் பெற முயற்சிக்கட்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பிரியங்கா – நளினி சந்திப்புக்கு தான் காரணம் என்கிறார் ராஜேந்தர்



(திருச்சி)

ராஜீவ் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைதாகி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் வேலூர் சிறையிலுள்ள நளினியுடனான பிரியங்காவின் சந்திப்புக்கு தானே மூலகாரணம் என இலட்சிய தி.மு.க தலைவர் விஜய டி.ராஜேந்தர் கூறியுள்ளார்.

திருச்சி வந்த ராஜேந்தர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

விலைவாசிப் பிரச்சினை நாட்டை உலுக்கி வருகிறது. இது குறித்து டில்லியிலுள்ள எதிர்க்கட்சியினர் உறுதியாக குரல் கொடுக்காமல் இருப்பது வருத்தம் தருகிறது.

வேலூர் மத்திய சிறையில் பிரியங்கா-நளினியிடையே நடந்த சந்திப்புக்கு நான் தான் மூல காரணம். விரைவில் இலங்கை இனப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு ஏற்படும்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எனது கட்சி சார்பில் சென்னையில் பொதுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

ஆனால் தமிழக அரசு அதற்கு அனுமதி தராமல் மறுத்து வருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது என்றார். (ச-5)

## தமிழக அரசு தயாரிக்கும் படத்தில் விஜய், மாதவன், சூர்யா இணைவு

(சென்னை)

குழந்தைகள் மற்றும் பெண்களின் கல்வியின் அவசியத்தை வலிறுத்தி தமிழக அரசு தயாரிக்கும் விழிப்புணர்வு படத்தில் விஜய்,மாதவன், சூர்யா நடிக்கின்றனர்.



மக்களுக்கு அவசியமாகச் சொல்ல வேண்டிய விடயங்களை மத்திய மாநில அரசுகள் குறும்படமாக அல்லது விளம்பரப்படமாக தயாரித்து அவற்றை திரையரங்குகளின் மூலமாகவோ அல்லது தொலைக் காட்சிகள் மூலமாகவோ மக்களைச் சென்றடையச் செய்வது வழக்கம்.

இவ்வகையில் குழந்தைகள் மற்றும் பெண்களின் கல்வி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழக அரசின் மூலம் விளம்பரப் படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

இப்படத்தில் விஜய்,மாதவன், சூர்யா நடிக்கின்றனர். இப்படத்தை கண்ணாமூச்சி ஏனடா படத்தை இயக்கிய பிரியா இயக்குகிறார்.

சிவாஜி படத்திற்கு ஒளிப்பதிவு செய்த கே.வி.ஆனந்த் ஒளிப்பதிவு செய்கிறார். நான்கு விதமாக இந்தப் படம் உருவாக்கப்படவுள்ளது. குன்றத்தூரில் படப்பிடிப்பு நடந்து வருகிறது.

இந்த நடிகர் மூவரும் பணம் வாங்காமல் நடித்து வருவதாக தமிழக செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## கொழும்புப் பிரதேசத்தில் நான்கு பேர் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பு, நீர்கொழும்பு, பேலியகொட ஆகிய பகுதிகளில் நான்குபேர் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் எம்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை புதுச் செட்டித்தெருப் பகுதியில் தம்பிராசா என்பவர் கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் வானில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அவரது மனைவி கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு பிரதான வீதியில் மோகன்தாஸ் விஜயராணி தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் வானில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அவரது கணவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவரைக் கடத்திச் சென்ற வானின் இலக்கம் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பேலியகொட துட்டகைமுனு மாவத்தையில் வெள்ளை நிற வானில் வந்த குழுவினர் இளைஞர் இருவரினது கண்களைக் கட்டி கடத்திச் செல்லப்பட்டு வீடொன்றில் வைத்து விசாரணை செய்தமை தொடர்பாக பொலிஸுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இவர்களில் ஒருவர் கடந்த சனிக்கிழமை கண்கள் கட்டப்பட்ட நிலையில் பேலியகொடப்பகுதியில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-2)

# இன்று ஒரு தகவல்

## தவறு செய்யுங்கள்!

இந்த உலகத்திலே தவறு செய்யாத மனிதர்களே கிடையாது. அப்படி இருக்கும்போது எப்போதாவது நாம் த்வறு செய்துவிட்டால் அதற்காக மனமுடைந்து போகலாமா? வாழ்க்கையில் வெறுப்படைந்து போகலாமா? ஒரு தவறு நடந்துவிட்டால் அதற்காக மனம் உடைந்து போகாதீர்கள். அதை ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளுங்கள். அதே தவறு மறுபடியும் நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். தடைக்கல்லை படிக்கல்லாக மாற்றிக் கொள்ளுங்கள்.

ஓர் அலுவலகத்தில் உயர்ந்த பதவியிலிருந்த அதிகாரி, சிறந்த நிர்வாகி எனப் பெயர் பெற்றிருந்தார். அவர் தனக்குக் கீழே பணிபுரிபவர்களிடம் "இந்த நிறுவனத்தில் நீங்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் தவறு செய்யலாம். ஆனால் ஒரே தவறை மறுபடியும் செய்யக்கூடாது." இதை மேலோட்டமாகப் பார்த்தால் அவர் ஏதோ தன்னுடைய ஊழியர்களைத் தவறு செய்யத்தூண்டுவது போலத் தெரியும். ஆனால் உண்மை அப்படி அல்ல. இன்று என்ன நடக்கிறது தெரியுமா? அனேகமாக எல்லாருமே ஒரே தவறைத்தான் திரும்பத்திரும்பச் செய்கிறார்கள்.

விளையாட்டு வீரர்கள் ஒரே மாதிரியான தவறுகளை திரும்பத்திரும்பச் செய்வதுண்டு. கணக்கு எழுதுகிறவர்கள் ஒரே தவறை மறுபடியும் செய்வார்கள். அலுவலகத்துக்கு வருபவர்களைக் கவனித்துப் பாருங்கள் ஒருநாள் தாமதமாக வந்தால் பரவாயில்லை. தினந்தோறும் தாமதமாகவே வருவார்கள். இது மாதிரி செய்த தவறையே திரும்பத் திரும்பச் செய்வதற்கு என்ன காரணம்?

சோம்பல், ஞாபக மறதி, கவனக்குறைவு, தன்னுடைய திறமை மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை இப்படி இவற்றில் ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் இதுபற்றி ஆய்வு செய்கிற வல்லுநர்கள்.

ஒருமுறை செய்த தவறை மறுபடியும் செய்வதில்லை என்று முடிபு செய்துகொண்டு அதைச் செயற் படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். வாழ்க்கை வெற்றிகரமாக அமைய அதுபோதும் என்கிறார்கள் அந்த வல்லுநர்கள். எனவே, வாழ்க்கையில் வெற்றிகரமாக நடைபோட விரும்பும் இளைஞர்கள் தவிர்க்க வேண்டியவை அனேகம் உண்டு.

முதலில் சோம்பலைத் தவிருங்கள்! சுறுசுறுப்பாக இயங்குங்கள்! இரண்டாவது ஞாபக மறதி, எந்தச் செயலிலும் ஈடுபாடு வேண்டும், அக்கறை வேண்டும், மூன்றாவது கவனக்குறைவு, எதையும் அலட்சியப் படுத்தக் கூடாது. நான்காவது என்னால் முடியாதது என்கிற அளவுக்கு மீறிய நம்பிக்கை ஆபத் தில் கொண்டுபோய் விடக் கூடும். எனவே, முதல் தவறு இளைஞர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும்!

ஒரு மனிதர் அவர் தனது இரண்டு காதுகளிலேயும் கட்டு (பேண்டேஜ்) போட்டுக்கொண்டு வந்தார். அவருடைய நண்பர் அதைக் கவனித்துவிட்டார். என்ன சார் ஆச்சு? என்று விசாரித்தார். "ஒன்று மில்லைசார்... வீட்டிலே ரொம்ப ஆர்வமாக டி.வி.யில் கிரிக்கெற் மாச் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது பக்கத்திலே என் மனைவி துணிகளுக்கு அயர்ன் பண்ணிக் கொண்டிருந்தார்.

ஏதோ அலுவலாக அந்த அயர்ன் பாக்ஸை அப்படியே வைத்துவிட்டு சமையலறைக்குப் போய்விட்டார். அந்தச் சமயம் பார்த்து டெலிபோன் மணி அடித்தது. அவசரமாக ஓடிப்போய் அதை எடுத்துக் காதிலே வைத்தேன். அப்பொழுதுதான் தெரிந்தது– அது டெலிபோன் ரிசீவர் அல்ல ; அயர்ன் பாக்ஸ் என்பது. ஒரு பக்கத்து காது வெந்துவிட்டது.

"ஒரு காது சரிசார்... இரண்டு காதிலும் ஏன் சார் இப்படி ஆனது?" "அதே ஆள் மறுபடியும் டெலி போன் பண்ணினானே சார்.!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை சட்டக்கல்லூரிக்கு மாணவர்களை அனுமதித்தல்

இலங்கைச் சட்டக்கல்லூரியில் 2009ஆம் கல்வி ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப் பத்திரங்களை எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதிவரை அலுவலக வேலை நாட்களில் மு.ப.9 மணி தொடக்கம் ந.ப.12.00 மணி வரையும் பி.ப.1.30 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரையும் சட்டக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இலங்கைச் சட்டக்கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

**அனுமதிக்கான தகுதிகள்**

நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள்:-

(அ) க.பொ.த.(உ/த) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் (அதாவது ஆகஸ்ட் 2000ஆம் ஆண்டு பரீட்சையும் அதன் பின்னரும்) ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆயினும் மேற்படி பரீட்சைக்கு பழைய பாடத்திட்டத்தின் கீழ் தோற்றிய ஆளொருவருக்கு ஒரே அமர்வில் நான்கு பாடங்களில் சித்தி தேவைப்படும்.

(ஆ) சட்டக்கல்விப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களாய் இருத்தல் வேண்டும். மற்றும்

இ க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியிலும்/ சிங்கள மொழியிலும்/திறமைச் சித்தி பெற்றிருத்தலும் வேண்டும்.

**நுழைவுப் பரீட்சை**

நுழைவுப் பரீடசை செப்டெம்பர் மாத முதல் பகுதியில் கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

**விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதிநாள்**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், அதிபர் இலங்கைச் சட்டக்கல்லூரி, இல.224, புதுக் கடைத் தெரு, கொழும்பு 12 முகவரியில் 2008ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

**விளக்கப் பிரசுரமும் விண்ணப் பப்பத்திரக் கட்டணங்களும்**

விண்ணப்பப்பத்திரம், கடந்த கால வினாப்பத்திரங்கள் மற்றும் இயைபான தகவல் அடங்கிய விளக்கப்பத்திரத்தை ரூ.1500/க்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவத்தைப் பெறுவதற்கு, மேற்குறித்தனவற்றுக்கான கொடுப்பனவைக் கூட்டிணைக் கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையின் பெயரில் புதுக்கடைத் தெருக் கிளையிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையில் 01.18041.01.1 ஆம் இலக்க கணக்கில் வரவு வைக்கப் படும்வரையில் ஹற்றன் நஷனல் வங்கியின் ஏதேனுமொரு கிளையில் செலுத்தி வங்கியின் மூலப் பற்றுச்சீட்டை சட்டக்கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

வங்கிப்பற்றுச்சீட்டில் உங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், முதலெழுத்துக்களுடன் உங்களது பெயரையும் குறிப்பிடவும்,

விண்ணப்பப்படிவம் மற்றும் விளக் கப்பிரசுரத்தைப் பதிவுத்தபால் மூலம் பெற விரும்புகின்றவர்கள் ரூ.1500/க்கான வங்கிப்பற்றுச் சீட்டையும் சுய விலாசமிடப்பட்ட 15"X10" அளவிலான தபால் உறையுடன் தபாற் செலவுக் கான ரூ 150/- பெறுமதியான முத்திரைகளையும் அனுப்புதல் வேண்டும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ-5)

# தே.க.நிறுவனத்தின் செயற்பாட்டினால் சிரமங்களை எதிர்கொண்ட பரீட்சார்த்திகள்

(அநுராதபுரம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடப்படாத செயற்பாட்டினால் கல்வி மாணிக் கற்கை நெறியின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17ஆம் திகதி ஆரம்பித்த இறுதிப்பரீட்சைகளின் பிரதான பாடங்கள் கடந்த 19ஆம் திகதி போயா தினத்தன்று நடைபெறும் என நேர சூசி தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டது. எனினும் அன்றைய தினம் போயாதினமாகையால் அன்றைய நாளில் நடக்கவிருந்த பாடங்கள் அனைத்தையும் எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக 18ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் பரீட்சைக்குத் தோற்ற வந்திருந்த ஆசிரிய மாணவர்களுக்கு, பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களினால் வாய்மொழி மூலமாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

18ஆம் திகதி நடைபெற்ற பாடங்களுக்கு தோற்றாத பலருக்கு, 19ஆம் திகதி நடைபெற விருந்த பரீட்சைப் பாடங்கள் 4ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது பற்றிய தகவல் தெரியாமல் பரீட்சைக்குத் தயாராகி 19ஆம் திகதி பரீட்சை நிலையங்களுக்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

அதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை மாலை நேரப் பரீட்சைகள் பி.ப.1 மணிக்கே ஆரம்பித்ததால் முஸ்லிம் ஆசிரிய மாணவர்கள் ஜும்மாத் தொழுகையை நிறைவேற்ற முடியாமல் போனது. எமது நாட்டில் நடைபெறும் அரசாங்கப் பரீட்சைகள் அனைத்தும் வெள்ளிக்கிழமை மாலை வேளையில் 2.30 மணிக்கு தொடங்குகின்ற போதும் இலங்கையின் கல்விக் கொள்கையினையும் பாடத்திட்டங்களையும் திட்டமிடுகின்ற முக்கிய பங்காளியான தேசிய கல்வி நிறுவகம் போயா தினங்களில் பரீட்சைகளை நடத்த திட்டமிட்டதும் வெள்ளிக்கிழமை முஸ்லிம் மாணவர்களுக்கு ஜும்மா தொழுகையை நிறைவேற்ற சந்தர்ப்பம் வழங்கப் படாததும் மாணவர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# இராசிபலன்

22.04.2008

(சித்திரை 10, செவ்வாய்க்கிழமை)

துதியை முன்னிரவு 07.33 மணிவரை

விசாகம் முன்னிரவு 08.27 மணி வரை

இராகுகாலம் 03.00.04.30 மணிவரை

சுபநேரம் 10.30-12.00 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | களஸ்திர நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும், அபூர்வசந்திப்பு. |
| இடபம் | மனமகிழ்ச்சி, தேகநலன், பண வருவாய், காரியசித்தி. |
| மிதுனம் | அஜீரணரோகம், வியாபார நன்மை, மனக்கவலை, தாழ்ந்த சுபாவம். |
| கடகம் | மனச்சஞ்சலம், தாய்வழி உறவு, நல்ல முயற்சி, கல்வியில் ஆர்வம். |
| சிங்கம் | மாதர் நட்பு, மனமகிழ்ச்சி, காரிய நன்மை, போசனசுகம். |
| கன்னி | கௌரவக்குறைவு, போசன சுகக் குறைவு, ரோகநிலை, முயற்சிதாமதம். |
| துலாம் | நல்லமுயற்சி, சிந்தனை மிகுதி, பெரியோர் சந்திப்பு, விருந்துபசாரம். |
| விருச்சிகம் | மனச்சோர்வு, காரிய அலைச்சல், தனவிரயம், பிதாசிந்தை. |
| தனுசு | நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம், விருந்துபசாரம், பெருமையடைதல். |
| மகரம் | நன்கொடை, தூரதேசச் செய்தி, புதிய திருப்பம், தொழில்விரக்தி. |
| கும்பம் | அதிக பிரயாசை, உடல்உபாதை, புதிய முயற்சி, வீண்அச்சம். |
| மீனம் | போசனசுகம், ஆரோக்கியக் குறைவு, அச்சமான நிலை, வீண்பகை. |

வளவன்


# ஸ்ரீ அம்மா பகவான் சரணம்




இந்தியாவில் அதி உன்னத சக்தி பீடமாம் "பொன்னகரின்" மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 22ஆம், 23ஆம் தினங்களில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு 23ஆம் திகதி புதன்கிழமை யாழ். இந்து ஆரம்ப பாடசாலை தியான மண்டபத்தில் பி.ப.3.00 மணி முதல் 5.00 மணிவரை கலச பூசை நடைபெறும். இதில் அனைத்துப் பக்தர்களும் கலந்துகொண்டு ஆசிபெற்று உய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

ஏகத்துவ நிலையம்
(யாழ். தலைமையகம்)
மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(C/1050)

## நூல் கண்காட்சியும் இலக்கியக் கருத்தரங்கும்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, உலக புத்தக தினத்தை முன்னிட்டு நூல் கண்காட்சியும், இலக்கியக் கருத்தரங்கும் நடாத்தவுள்ளது. இந்நிகழ்வில் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வதிரி பொதுநூலக மண்டபத்தில் நூல் கண்காட்சி இடம்பெறும்.

அத்துடன் நெல்லியடி சிதம்பரப்பிள்ளை புத்தக சாலையினால் நூல் விற்பனையும் மேற்கொள்ளப்படும்.

நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு, பிரதேச செயலக கலாசார மண்டபத்தில், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி தலைமையில் யாழ்ப்பாணத்தின் ஜனரஞ்சக நாடக அரங்கின் செயல் விளக்கங்களுடன் இலக்கியக் கருத்தரங்கு இடம்பெறும். (ஓ)

## துரையப்பா விளையாட்டரங்கு மீண்டும் மக்கள் பாவனைக்கு

நீண்டகாலத்திற்கு முன்னர் புனரமைக்கப்பட்டு, பாவனையற்றிருந்த துரையப்பா விளையாட்டரங்கு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வைபவ ரீதியாக மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது. இவ் வைபவத்தின் போது, கலை நிகழ்ச்சிகளும், உதைபந்தாட்ட விளையாட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ள தோடு, மலிவு விற்பனைக் கடைகளும் செயற்படவுள்ளது.

எதிர்காலத்தில் இம் மைதானத்தைப் பயன்படுத்தி சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாகவும், அருகிலுள்ள பூங்காவைப் பயன்படுத்தி நகரத்தில் வதியும் சிறுவர்களும், முதியோரும் தமது பொழுதினை மகிழ்ச்சியாகக் கழிக்கவும் வாய்ப்பு ஏற்படுமென எதிர்பார்ப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார். (அ)

## உலக புத்தக தினவிழா

சுன்னாகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உலக புத்தக தினவிழா நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், கௌரவ விருந்தினராக கலைச்செல்வி ஆசிரியர் சிவஸ்ரீ சி.சரவணபவன் (சிற்பி) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் விசேஷ நிகழ்வுகளாக "வெள்ளி மலை" சஞ்சிகை வெளியீடும், "பூரண மனிதனாகத் தேவையானது..." வாசித்தலே, யோசித்தலே, நேசித்தலே, பூசித்தலே எனும் தலைப்புகளில் நான்கு பாடசாலை மாணவ அணிகள் பங்குபற்றும் பட்டிமன்றமும் இடம்பெறும்.

பட்டிமன்றத்திற்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியரும், திருவாவடுதுறை ஆதீன பிரசாரகருமான ஏ. அனுசாந்தன் நடுவராகப் பணிபுரிவார். தொடர்ந்து "வளமான வாசிப்பே மனிதனை மேம்படுத்தும்" எனும் தலைப்பில் சோ.பத்தமநாதன் தலைமையிலான கவியரங்கும், வலி.தெற்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் வழங்கும் "புத்தகம் தரும் வித்தகம்" எனும் பொருளிலான வில்லிசையும் இடம்பெறவுள்ளது. (ஓ)

# ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இலவச புத்தகங்கள் யால கப்பல் மூலம் யாழ். எடுத்துவரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான ஒருஇலட்சத்து 50 ஆயிரம் இலவச பாட புத்தகங்கள், யால' கப்பல் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடப்புத்தகங்களில் மூன்றாம் கட்டமாக தற்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள புத்தகங்களில் தரம் 11 க்கு உரிய 'தமிழ் மொழியும் இலக்கியமும்', 'கணிதம்', 'விஞ்ஞானம்' ஆகிய புத்தகங்கள் உள்ளடக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு யாழ்ப்பாணத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் இப் பாடப் புத்தகங்கள் கோட்ட வாரியாக வழங்கப்பட்டு அடுத்த வாரத்தில் மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட மாணவர்களுக்குத் தேவையான அளவு புத்தகங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் சில புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்படாமையினால் பாடசாலைகளுக்கு வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டிருப்பதால் அவை வெளிவந்தவுடன் சமகாலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை வெளிவந்த இலவசப் பாட புத்தகங்களில் யாழ்.மாவட்ட மாணவர்களின் தேவைக்குரியளவு புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் லெனின் மதிவாணன் தெரிவித்தார்.

'மொழியும் இலக்கியமும்' என்ற பாடத்துக்குரிய பாடத்திட்டத்தில் 'இலக்கிய தொகுப்பு' பாடநூல் தமிழ் மொழியில் மட்டுமல்ல சிங்கள மொழி மூலத்திலும் வெளிவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)




## பண்டத்தரிப்பு தேவாலயத்தில் பொருட்கள் கொள்ளை

பண்டத்தரிப்பு புனித பாத்திமா தேவாலயத்தில் உள்ள ஒலிபெருக்கி மற்றும் பெறுமதிமிக்க பொருட்கள், உண்டியல் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணம் என்பன இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

தேவாலயக் கதவை இரவு நேரம் உடைத்து இத் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## கணிதம்,விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தேர்ச்சிப் பரீட்சை

(அல்வாய்)

வடமாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 6இலிருந்து தரம் 11 வரை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான தேர்ச்சிப் பரீட்சை 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு சகல கல்வி வலயங்களிலும் நடைபெறவுள்ளது.

இதன்பிரகாரம் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கல்வி கோட்டங்களில் கரவெட்டி கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி கோட்டங்களின் ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

தரம் 6 -தரம் 11வரை கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கும் சகல ஆசிரி யர்களையும் தவறாது பாடரீதியாக இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குமாறு சகல அதிபர்களையும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார். (ஓ-19)

## வேலைகளுக்கான உணவு வழங்கல் மூலம் பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தி

(அல்வாய்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை உட்கட்டமைப்பினை விருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்பிரகாரம், உலக உணவுத் திட்டத்தில் வேலைகளுக்கான உணவு வழங்கலின் கீழ் பின்வரும் வேலைகளுக்கு மட்டுமே வழங்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

1.பாடசாலைகளில் சமயலறை அமைத்தல். இதற்கு ரூபா 1 இலட்சத்து 25 ஆயிரம் பெறுமதியான -500 மனித நாட்களுக்கும்.

2. பாடசாலை தோட்டம் அமைத்தல் ரூபா ஆயிரம் -40 மனித நாட்கள்.

3. பாடசாலைக்கு செல்லும் உள்ளக வீதியை சீர்செய்தல் 1 கிலோ மீற்றருக்கு 1300 மனித நாட்கள்.

இவ்விதம் உலக உணவுத்திட்டம் வழங்கும் வேலைக்கான உணவு வழங்கும் திட்டத்தின் மூலம் பாடசாலை உட்கட்டமைப்பு வேலைகளைச்செய்யலாம் எனயாழ்.மாவட்டதிட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ஓ-19)

## ஸ்ரீ அம்மா பகவான் கலசபூஜை

இந்தியாவில் அதி உன்னத சக்திபீடமாம் பொன்னகரின் மகா கும்பாபிஷேக விழா இன்றும் நாளையும் நடைபெறுவதை முன்னிட்டு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை தியான மண்டபத்தில் நடைபெறவுள்ள கலச பூஜையில் பக்தர்களை கலந்து கொள்ளுமாறு ஏகத்துவநிலையத்தின் தலைமை அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது. (து)

## விண்ணப்பம் கோரல்

யாழ் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் முதுதத்துவமானி ஆய்வு, கலாநிதிப் பட்ட ஆய்வு கற்கை நெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது என பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

தகுதியானவர்கள் இவற்றுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் மேலதிக விபரங்களை பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் பீடாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-3,4)

## மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் (வியாழன், வெள்ளி) 24,25 ஆம் திகதிகளில் முற்பகல் 8.30 மணிமுதல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-19)

## வலி.தெற்கு புத்தகத் திருவிழா

உலக புத்தக தினத்தையொட்டி மாணவர்கள், வாசகர்கள் நல்ல புத்தகங்களை ஒருங்கே ஓரிடத்தில் பார்வையிட்டு கொள்வனவு செய்ய வசதியாக யாழ்.நகரின் பிரபல புத்தகசாலைகளான பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூற்றர்ஸ், புக்லாப் நிறுவனம் ஆகியன தமது விற்பனைக்கூடங்களை எதிர்வரும் 24,25,26,27 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4மணி வரை மருதனார் மட சந்திக்கு அருகில் உள்ள உடுவில் பொது நூலகத்தில் அமைக்கவுள்ளன. அத்துடன் வலி தெற்கு நூலகங்களின் நூற் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## அல்லைப்பிட்டியில் மீள் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியிலிருந்து 2006ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தவர்களின் 2ஆம் கட்டத் தொகுதியினர் நேற்று மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை உட்பட பல இடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 65 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் நேற்று யாழ்.செயலகத்தினால் மூன்று பேருந்துகளில் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபாவும் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-6)





அண்மையில் நடைபெற்ற பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன், பாடசாலை அதிபர் வே.துரைசிங்கத்தினால் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினர் மங்களவிளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினரால் பாடசாலைக் கொடி ஏற்றப்படுவதையும் இதன்போது மாணவர்கள் பாடசாலைக் கீதம் இசைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படை முழுமையாக வாபஸ் ஆகுமா?

(பாக்தாத்)

ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படை அந்த நாட்டின் அதிபர் தேர்தலுக்கு பின் முழுமையாக வாபஸ் பெறப்படுமா? தேர்தல் பிரசாரத்தில் இந்த விவகாரம் கொடிகட்டிப் பறக்கிறது. அமெரிக்க அதிபர் தேர்தலில் ஆளும் குடியரசு கட்சி சார்பில் ஜோன் மெக்கெய்ன் போட்டியிடுகிறார்.

ஈராக்கில் இருந்து அமெரிக்க படை வாபஸ் ஆகாது என்று பிரசாரம் செய்து வருகிறார். எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் அதிபர் கிளின்டன் மனைவி ஹிலாரி கறுப்பின தலைவர் ஒபாமா இருவரில் யார் போட்டியிடுவது என்பதில் இழுபறி நீடிக்கிறது. இப்போதுள்ள நிலையில் ஹிலாரியை ஒபாமா முந்தி வருகிறார். இருவருமே ஈராக்கில் இருந்த படையை முழுமையாக வாபஸ் பெறுவோம் என்று தான் பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்கள் எண்ணிக்கை ஜுலையில் ஒரு இலட்சத்து 40 ஆயிரமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. படிப்படியாக படையை குறைக்கும் நடவடிக்கையில் 20 ஆயிரம் பேர் விலக்கிக்கொள்ளப்படவுள்ளனர். ஆனால் ஈராக்கில் இருந்து படையை முழுமையாக விலக்கிக்கொள்ள முடியுமா என்பது கேள்விக் குறியாக உள்ளது. ஈராக்கில் உள்ள பயங்கரவாத படைகளின் தாக்குதல் அடங்காதது



மட்டுமின்றி அமெரிக்கப் படை விலக்கிக் கொள்ளப்பட்டால் முழுமையாக ஜனநாயக ஆட்சி நடக்கும் என்றும் கூற முடியாத நிலை காணப்படுகிறது. இது குறித்து இராணுவ ஆய்வாளர்கள் கூறுகையில், அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு பின் ஈராக்கில் அமெரிக்க படை நீடிப்பது பற்றி பெரும் கேள்வி எழும். ஆனால் முழுமையாக விலக்கிக்கொள்ளும் முடிவில் பெரும் சிக்கல் உள்ளது.

ஈராக்கில் நிரந்தர அமைதி, ஜனநாயகம் மலர அமெரிக்கா கொடுத்த வாக்குறுதிக்கு பிரச்சினை ஏற்படும். அதனால் அமெரிக்க படையை விலக்கிக்கொள்வது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது என்று தெரிவித்தனர். ஈராக்கில் உள்ள இராணுவ அதிகாரிகள் கூறுகையில், அமெரிக்க படை பல பகுதிகளில் இருந்து இப்போதே வாபஸ் பெற்ற வண்ணம் உள்ளது. சில இடங்களில் படையினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகிறது. அதனால் படிப்படியாக நாங்களே குறைத்து வருகிறோம் .

அதனால் முழுமையாக வாபஸ் பெற்றாலும் பெரிய அளவில் பாதிப்பு வராது என்று தெரிவித்தனர்.

(அ-5)

## மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசந்தா நேபாள பிரதமராகிறார்

(காத்மாண்டு)

நேபாளத்தின் புதிய பிரதமராக தாம் பதவியேற்கப் போவதாக மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசந்தா கூறியுள்ளார்.

நேபாள நாட்டின் நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் மாவோயிஸ்ட் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது.

இதையடுத்து கிர்திபூர் என்ற இடத்தில் அக்கட்சியின் பேரணி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தொண்டர்களிடையே பேசிய பிரசந்தா புதிய அரசுக்கு தாம் தலைமையேற்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

தற்போது இடைக்கால அரசு பொறுப்பில் உள்ள கட்சி கூட்டணியின் ஒப்புதல் படி முதல் நாடாளுமன்ற கூட்டத்தில் நேபாளம் குடி யரசு நாடாக அறிவிக்கப்படும் என்று பிரசந்தா கூறினார்.

நேபாளத்தில் 240 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க நடைபெற்ற நேரடித் தேர்தலில் மாவோயிஸ்ட் கட்சி 120 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

(அ-5)

## தேவாலயத்தில் பாலியல், இனப்பாகுபாடு புகார் அமெரிக்கர்கள் மத்தியில் போப் ஆண்டவர் கவலை

(நியூயோர்க்)

போப் ஆண்டவர் 16ஆம் பெனடிக் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அமெரிக்காவில் வசிக்கும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக உள்ளனர். அவர்கள் மத்தியில் உரையாற்றும்போது தேவாலயத்தில் இனபாகுபாடு காட்டுவது குறித்தும் புகார் எழுவது குறித்தும் வருத்தம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு தேவாலயமும் மத வழிபாட்டு தலங்களும் புனித தன்மையுடன் இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். இது போன்ற பிரச்சினைகளை உங்களுடைய பிஷப் உடன் சேர்ந்து தீர்வு காண வேண்டும் .பல்வேறு இன மக்களிடையே பாகுபாடு காட்டுவது வருத்தம் அளிக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் உன்னத மன நிலையை அளிப்பதாக அமெரிக்காவில் தேவாலயங்களை ஆண்டவர் அளித்துள்ளார் என்றார்.

அமெரிக்காவில் உள்ள தேவாலயங்களில் பாலியல் கொடுமைகள் நடப்பதாக புகார்கள் எழுந்ததும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ரூ.8 ஆயிரம் கோடி (2 பில்லியன் டொலர்) நஷ்ட ஈடு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

## அவசியம் ஏற்பட்டால் பிரதமராக பதவியேற்பேன்

### ஆசிப் அலி சர்தாரி

(இஸ்லாமாபாத்)

அவசியம் ஏற்பட்டால், பிரதமராக பதவியேற்பேன் என, பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் ஆசிப் அலி சர்தாரி கூறினார். பாகிஸ்தான்-மக்கள் கட்சியின் இணைத் தலைவரும், முன்னாள் பிரதமர் பெனசிரின் கணவருமான ஆசிப் அலி சர்தாரி கூறியதாவது: பாகிஸ்தானின் பிரதமராக, நான் பதவியேற்பேனா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. அவசியம் ஏற்பட்டால், பிரதமராக பதவியேற்பேன். பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு தனிப் பெரும்பான்மை கிடைத்தால், அதிபர் முஷாரப்பை பதவி நீக்கம் செய்ய முயற்சிக்கப்படும். சிந்து மாகாணத்தில் உள்ள லர்கானா தொகுதிக்கு இடைத்தேர்தல் நடக்கவுள்ளது. இது,பெனாசிர் போட்டியிட்ட தொகுதி. இந்த தொகுதியில் போட்டியிட, முடிவு செய்துள்ளேன். பாகிஸ்தானில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காக, எங்கள் கட்சிக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். மக்கள்



விரும் பிய மாற்றத்தை, நாங் கள் கொண்டு வருவோம். சூழ்நிலையை பொறுத்து மாற்றம் நிகழும். நீதித்துறையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பான மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். இவ்வாறு ஆசிப் அலி சர்தாரி கூறினார். (அ-5)

## முஷாரப்பிற்கு எதிராக கண்டனத் தீர்மானம் கொண்டுவருவதற்கான பலம் அரசுக்கு இல்லை

### மக்கள் கட்சி தலைவர் சர்தாரி தெரிவிப்பு

(பாகிஸ்தான்)

ஜனாதிபதி முஷாரப்பிற்கு எதிராக கண்டனத் தீர்மானத்தைக்கொண்டுவந்து, அவரை பதவியிலிருந்து அகற்றுவதற்கு தேவையான



ஆதரவு இல்லாமை காரணமாக புதிய அரசாங்கமானது முஷாரப்புடன் சுமுகமான உறவைப் பேணத் தீர்மானித்துள்ளதாக பாகிஸ்தான் மக்கள்கட்சியின் இணைத் தலைவர் ஆசிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக் குமிடையே சுமுகமான உறவொன்றே நிலவு கிறது. அவரது நிலையை முறியடிப்பதற்கு தேவையான, போதுமான அதிகாரம் எம்மிடம் இல்லாதுள்ளது. என சர்தாரி தெரிவித் துள்ளார்.

நாட்டின் நலன் கருதி நாம் பிரச்சினைகளை உருவாக்க விரும்ப வில்லை ஆனால் அதற்காக நாம் முஷாரப்பை ஏற்றுக் கொள்கிறோம் என்று அர்த்த மில்லை. எங்களுக்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பெரும்பான்மை இருக்குமா யின் அவருக்கு எதிரான நடவடிக்கைகுறித்து தீர்மானித்திருப்போம் என சர்தாரி குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும் பாராளுமன்றத் தின் உன்னத தன்மையை பேணுவதற்குமான அவசியம் குறித்தும் இதன் போது சர்தாரி வலியுறுத்தினார்.

(அ-5)

## சோமாலியாவில் இடம்பெற்ற மோதலில் பலத்த இழப்பு, 13 பொதுமக்கள் பலி

(சோமாலியா)

சோமாலியத் தலைநகர் மொகதிசுவில் நடந்த மோதலில் குறைந்தது 13 பொது மக்கள் பலியாகியுள்ளனர். கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடைக்கால அரசுக்கு ஆதரவான எத்தியோப்பியாவின் படைகளுக்கும் இடையே இரண்டாவது நாளாக நடக்கும் மோதலில் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது.

சனிக்கிழமை 20க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் உடல்களை எடுக்க எத்தியோப்பியப் படையினர் சென்ற போதே நகரில் மோதல்கள் ஆரம்பித்தன.

காயமடைந்த சுமார் 100 பொதுமக்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் சண்டைகள் தொடருவதால் பல மக்கள் மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகக் கருதப்படுகிறது.

**உலக தரிசனம்**

மொகதிசு நகரின் அறுபது சதவீதமான மக்கள் சண்டைகள் காரணமாகப் புலம் பெயர்ந்துள்ளனர். இந்தப் போரினால் சோமாலியாவில் சுமார் இருபது லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

(அ-5)

## இரட்டைக்கோபுரம் தகர்க்கப்பட்ட இடத்தில் பாப்பரசர் பிரார்த்தனை

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் 2001 ஆண்டு செப்டெம்பர் 11 தாக்குதலில் சுமார் 3ஆயிரம் பேர் கொல்லப்பட்ட முக்கிய இடமான இரட்டைக்கோபுரம் தகர்க்கப்பட்ட இடத்தில் புனித பாப்பரசர் பிரார்த்தனை நிகழ்வு ஒன்றை நடத்தியுள்ளார்.

அங்கு பரிசுத்த நீரைத் தெளித்து ஆசிர்வதித்த பாப்பரசர் அங்கு அஞ்சலிக்கான மெழுகுதிரியையும் ஏற்றினார்.

அந்தத்தாக்குதலில் உயிர் பிழைத்தவர்களையும் உயிரிழந்தவர்களின் உறவினர்களையும் பாப்பரசர் அங்கு சந்தித்தார்.

(அ-5)

## அமெரிக்க படையினர் மீதான தாக்குதலை தீவிரப்படுத்துங்கள்

### அல்கொய்தா தளபதி உத்தரவு

(லண்டன்)

ஈராக்கில் உள்ள அமெரிக்க படையினர் மீதான தாக்குதலை அடுத்த மாதம் முழுவதும் தீவிர படுத்த வேண்டும் என்று தீவிரவாதிகளுக்கு அல்கொய்தா தளபதி அபு கம்சா அல் முகாஜிர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**4 ஆயிரம் வீரர்கள்**

ஈராக்கில் அமைதியை நிலை நாட்டும் பணியில், அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுபடையினர் ஈடுபட்டு உள்ளனர். அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு அல்கொய்தா மற்றும் ஈராக்கில் உள்ள தீவிரவாதிகள் கூறி வருகின்றனர். மேலும் அமெரிக்க படையினர் மீது தொடர்தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே, இங்கிலாந்து இராணுவத்தின் ஒரு பகுதியினர் திரும்பி விட்டனர். ஆனால் அமெரிக்க இராணுவம் தொடர்ந்து முகாமிட்டு உள்ளது. தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 4 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் பலியாகி உள்ளனர். இது குறித்து அதிபர் புஷ், கடந்த வாரம் கவலை தெரிவித்து இருந்தார்.

**ஒருமணி நேர ஒலிநாடா**


இந் நிலையில், அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஈராக் தளபதி அபு கம்சா அல் முகாஜிர், ஒரு ஒலிநாடாவை வெளியிட்டுள்ளார். சுமார் ஒருமணி நேரம் ஓடும் அந்த நாடாவில் 4 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் உயிரிழந்ததை கொண்டாட வேண்டும் என்று கூறியுள்ளார். லண்டனில் உள்ள தீவிரவாதத்தை கண்காணிக்கும் நிறுவனம் ஒன்று இந்த நாடாவை வெளியிட்டுள்ளது.

மேலும் அந்த நாடாவில் இந்த மகிழ்ச்சியை வித்தியாசமான முறையில் நாம் கொண்டாட வேண்டும் இந்த கொண்டாட்டத்தில் தோல்வியடைந்த புஷ்சையும் கலந்து கொள்ள செய்வோம். அடுத்த ஒரு மாத காலத்துக்கு நேர்மையான தாக்குதலை தொடங்க வேண்டும். ஈராக்கில் உள்ள ஒவ்வொரு அமெரிக்க வீரரின் தலையையும் அதிபர் புஷ்சுக்கு அன்பளிப்பாக கொடுக்க வேண்டும் என்று அல் முகாஜிர் தெரிவித்துள்ளார்.

**தற்கொலைப்படை**

ஈராக்கில் உள்ள சன்னி பிரிவு தீவிரவாதிகளுக்கு இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார். இதற்கிடையே பக்தாத் நகருக்குள் அல்கொய்தா தீவிரவாதிகள் நுழைந்து இருப்பதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. அவர்கள் கார் வெடிகுண்டு மற்றும் தற்கொலைப்படை தாக்குதல்களில் ஈடுபடக் கூடும் என்றும் எச்சரித்துள்ளது. (அ-5)

# சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?




உங்கள் ராசிக்கு தைரிய ஸ்தானம் மற்றும் பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு-கேது பகவான்கள் 30.4.08 அன்று-தனம், வாக்கு, குடும்ப ஸ்தானம் மற்றும் அஷ்டம தானத்திற்குப் பெயர்ச்சியாகிறார்கள். இதனால் உங்களின் தன்னம்பிக்கை கூடும். பேச்சாற்றல் அதிகரிக்கும். உங்களின் நடை, உடை பாவனைகளில் ஒரு வேகம் உண்டாகும். உங்களின் கருத்துக்களை அடுத்தவர்கள் கவனத்துடன் பரிசீலிப்பார்கள். வருமானம் பெருமளவுக்கு வந்து கொண்டிருக்கும்.

அதே நேரம் வருமானம் வர,வர செலவுகளும் முன் வந்து நிற்கும். கொடுத்த இடத்திலிருந்து பணத்தைத் திரும்பப் பெற நடையாய் நடக்க வேண்டியிருக்கும். எனினும் இல்லத்திற்குத் தேவையான பொருட்களை எப்பாடு பட்டேனும் வாங்கிவிடுவீர்கள். மற்றபடி ஆவணங்களில் கையெழுத்திடும் முன், அனைத்து ஷரத்துக்களையும் நன்றாகப் புரிந்து கொண்டு கையெழுத்திடவும். ஆரோக்கிய விஷயத்தில் கண்களில் உபாதை வராமல் பார்த்துக் கொள்ளவும்.

இந்த ஆண்டு இறுதி வரையிலும் பாக்கியஸ்தானத்தில் குரு பகவானின் அருட்பார்வையில் சஞ்சரிக்கும் சனி பகவான், அனைவரிடமும் உங்களை நல்லுறவுடன் இருக்க வைப்பார். ஆன்மீகச்சுற்றுலா சென்று வருவீர்கள். சொந்தபந்தங்களிடம் மிகுந்த பற்று உண்டாகும். புதிய பொறுப்புகள் கிட்டும். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு சனி பகவான் மனோ தைரியத்தைக் குறைப்பார். மனதில் சஞ்சலங்கள் குடிகொள்ளும். தவறு செய்து விடுவோமோ என்கிற கலக்கம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அடுத்தவர்களின் சூழ்ச்சியைத் தக்க தருணத்தில் புரிந்து கொள்ள முடியாமல் போகும். பல்சம்பந்தப்பட்ட வியாதிகளும் உண்டாகும்.

இந்த ஆண்டு இறுதி வரை குருபகவான் உங்கள் வாழ்க்கையில் சீரிய முன்னேற்றத்தைக் கொடுத்தாலும், நண்பர்களின் வெறுப்பையும் சேர்த்தே தருவார். கடும் போட்டிகளையும் சந்திக்க நேரிடும். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு குரு பகவான் உங்களின் பொக்கிஷப் பெட்டியை நிரப்புவார். உங்களின் பேச்சில் வசீகரம் கூடும். உங்களின் உயர்ந்த பண்புகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும். குடும்பத்தினர் உங்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். சேமிப்பு உயரத்தொடங்கும். அனைவரிடமும் சகஜமாகப் பழகுவீர்கள். உங்களின் சொல்வாக்கு, செல்வாக்காக மாறும் என்றால் மிகையில்லை.

உத்ததியோகத்தர்கள் எவ்வளவுதான் நன்றாக உழைத்தாலும், அதில் மேலதிகாரிகள் குற்றம் குறைகளைக் காண்பார்கள். அதே சமயம் சக ஊழியர்கள் உங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள். சிலர் அலுவலக ரீதியாக வெளியூரில் சில காலம் தங்கிப் பணியாற்ற வேண்டி வரும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். அலுவலகத்ததில் கொடுத்திருந்த கடன் விண்ணப்பங்கள் உங்களுக்குச் சாதகமாகி, பண வரவு உண்டாகும்.

வியாபாரிகள் வியாபாரத்தை முனைப்புடன் செய்வார்கள். கூட்டாளிகள் மற்றும் நண்பர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள். கடன் கொடுப்பதைத்தவிர்த்து வியாபாரத்தை விரிவுபடுத்தவும். பழைய கடன்களை சரியான முயற்சியின் பேரில் திரும்ப அடைத்துவிடுவீர்கள். பொருளாதார வளம் நன்றாக இருக்கும். சிறிய அளவில் புதிய முதலீடுகளைச் செய்வீர்கள். அதில் எதிர் பார்த்த லாபத்தையும் காண்பீர்கள்.

விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். விவசாய இடுபொருட்களை சகாய விலைக்கு வாங்குவீர்கள். நீராதாரங்களைப பெருக்குவீர்கள். அதே சமயம், புதிய குத்தகைகளை நாடிச்செல்ல வேண்டாம். மற்றபடி எதிரிகளின் தொல்லைகள் இராது. நிம்மதியாக உங்களின் வேலைகளைச் செய்வீர்கள். உபரி வருமானங்களுக்காக காய், கனிகளையும் பயிரிடலாம். புதிய கால்நடைகளை வாங்கும் கட்டமிது.

அரசியல்வாதிகளின் பதவிக்கு, நெருங்கிய நண்பர்கள்; மூலமாகவே இடையூறுகள் உண்டாகும். அவர்களின் ரகசியத்திட்டங்களை சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். உங்கள் கட்சியினரிடமும், மாற்றுக் கட்சியின ரிடமும் மனம் திறந்து பேசவேண்டாம். முக்கியப் பிரச்சினைகளில் உங்கள் எண்ணங்களை பகிரங்கப்படுத்த வேண்டாம். மற்றபடி தொண் டர்கள் உங்களின் பேச்சுக்கு மரியாதை கொடுப்பார்கள்.

கலைத்துறையினருக்கு அனுகூலத் திருப்பங்கள் உண்டாகும். பாராட்டும், பண்மும் ஒருங்கே வந்து சேரும். சக கலைஞர்கள் மூலம் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். ரசிகர் மன்றங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள். அதேநேரம் சோம்பல் படாமல் உங்கள் காரியங்களைச் செய்யவும். பெண்மணிகளுக்கு கணவருடன் நிலவி வந்த கருத்து வேறு பாடுகள் மறையும். குடும்பத்தில் சந்தோஷம் நிறைந்து காணப்படும். உங்களின் பொறுப்புகளைச் சரியாக நிறைவேற்றுவீர்கள். சகோதர-சகோதரி உறவில் விரிசல்கள் மறைந்து சீர்படும். உடல் உபாதைகளால் பெரிய பாதிப்புக்கள் ஏற்படாது.

மாணவமணிகள் நல்ல முறையில் படித்து மதிப்பெண்களைப் பெறுவர். விளையாட்டுக்களில் ஈடுபட்டு உற்சாகமடைவர். உங்கள் வருங்காலக் கனவுகள் பலிப்பதற்கான அறிகுறிகளும் தென்படும்.

(தொடரும்)

# தகவத்தின் சிறுகதை தேர்வு முடிவுகள்

(கொழும்பு)

ஈழத்து இலக்கிய உலகில் தமிழ்க் கலைஞர் வட்டம் என்கின்ற தகவம் அமைப்பு 2007ஆம் ஆண்டின் மூன்றாம், நான்காம் காலாண்டுகளில் சஞ்சிகைகள் பத்திரிகைகளில் வெளியான சிறுகதைகளை தேர்வுக்கு உட்படுத்தியுள்ளது. தேர்வின் முடிவுகள் மதிப்பீட்டாளர் குழுவினரால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு,

**2007மூன்றாம் காலாண்டுக்கான பரிசுகள்:**

முதலாம் பரிசு- க.தணிகாசலம் (பாமரன்) எழுதிய தடைகள், இரண்டாம் பரிசு-பிரமிளா செல்வராஜா எழுதிய கோடிப்பக்கத்தில் ஒரு பலாமரம், மூன்றாம் பரிசு- கந்தர்மடம் தி.மயுரன் எழுதிய வைகறை மேகங்கள் .

**2007-நான்காம் காலாண்டுக்கான பரிசுகள்- சிறப்புப் பாராட்டுப்பெறுவன**

1.திருமதி கோகிலா மகேந்திரன் எழுதிய கால் ஒப்பம், 2.திருமதி பவானி சிவகுமாரன் எழுதிய விலகும் மழைமேகம், முதலாம் பரிசு - தெ.நித்தியகீர்த்தி எழுதிய போர்வைகள் மறைக்காத பார்வைகள்.

இரண்டாம் பரிசு பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா எழுதிய முதல் உறவு மூன்றாம் பரிசு -சிவனு மனோஹறரன் எழுதிய மட்டத்துக்கத்தி.

இது தொடர்பிலான பரிசளிப்பு நிகழ்ச்சி எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தகவத்தின் தலைவர் மாத்தளை கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சபா. ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் பரிசுக்குரிய கதைகளைப் பற்றிய அறிமுகவுரையை நிகழ்த்துவார் சிறப்புப் பாராட்டுப் பெறும் எழுத்தாளர்களும் பரிசு பெறும் எழுத்தாளர்களும் அன்றைய தினம் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-5)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை -2008

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் மேலும் இரண்டு வாரங்களினால் நீடிக்கப்பட்டுள்ளதென்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறுமென பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (அ-6)

# அரசுடன் இணைந்து செயற்படுவதில் தவறில்லை வீரவன்சவுக்கு மல்வத்ததேரர் எடுத்துரைப்பு

(கண்டி)

கட்சிக்குள் நிலவும் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணமுடியாவிட்டால் ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்லும் செயல் திட்டங்களுக்கு வலுவூட்டும் வகையில் அரசுடன் இணைந்து செயற்படுவதில் தவ றில்லை என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்றக் குழுவின் தலைவரும், பிரசார செயலாளருமான விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினரிடம் கண்டி, மல்வத்தை பௌத்த பீடாதிபதி திப்பட்டுவாவே சித்தார்த்த சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார். விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.வி.பி. கட்சியின் அதிருப்தி குழு எம்.பி.க்களான பியசிறி விஜேநாயக்க, மொஹமட் முஸாமில், தீபால் குணசேகர, சமன் ஸ்ரீ கேரத், பி.வி.திசநாயக்க, ரத்ன உதயசாந்த, அச்சல ஜாகொட நிமல்பிரேமவன்ச, ஜயசிங்க, ஜெயந்த சமரவீர ஆகியோர் கண்டி மல்வத்தை மகா நாயக்க தேரரை அவரது உத்தியோக பூர்வவாசஸ்தலத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தையின் போதே மல்வத்தை மகாநாயக்க தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த மகாநாயக்க தேரர் மேலும் கூறிய தாவது,

பயங்கரவாதத்தை முழுமையாக தோல்வியுறச்செய்யும் பொருட்டு ஜனாதிபதியின் தலைமையில் முப்படையினர்களும் பெரும் கரிசனையுடன் செயலாற்றிவரும் இவ்வேளையில் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் முக்கியமானது. அதன் பொருட்டு அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டாலும் அது தவறல்ல.

இடதுசாரிக் கட்சிகளின் மூலம் இந்நாட்டிற்கு குறிப்பிடும் அளவான சேவைகள் நடைபெறவில்லை. பிலிப் குணவர்த்தன, என். எம். பெரேரா ஆகிய தலைவர்கள் நாட்டின் பிர தான கட்சிகளுடன் இணைந்து செயலாற்றினர். எனவே நாட்டிற்கு சேவையாற்ற முடியுமென்பதை செயல்ரீதியாக நிரூபித்த இக்குழுவினர் தங்களது சக்தியை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டும்.

முப்படைகளையும் தைரியப்படுத்துவதில் கடந்த காலங்களில் விமல் வீரவன்ச மிகச் சிறந்த பணியாற்றியுள்ளார் என்பதை நாமறிவோம். அந்த ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் அவ்வாறே வழங்கவும், தற்போதைய வாத பேதங்களை இல்லாதொழித்து அனைவரும் ஒன்று சேர்தல் நலமாகும். அவ்வாறு இயலாவிட்டால் அரசுடன் இணைந்து செயற்படுங்கள். அது தவறல்ல. அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு நான் கூறவில்லை. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முடிவுகளை மேற்கொள்ளுங்கள். கட்சியின் உள்பிரச்சினைகள் எமக்குத்தெரியாது.

எனினும் நீங்கள், நாட்டிற்கு பாரிய சேவையாற்றியது எமக்குத்தெரியும். குறுகிய நோக்கில் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது.

இன்று பொருளாதாரப்பிரச்சினை மக்களுக்குப் பெரும் அழுத்தமாகவுள்ளது. இவைகளுக்குத் தீர்வுகாணப்படல் வேண்டும்.

நீங்கள் எல்லோரும் திறமைசாலிகள். சரியான பக்கத்திற்கு வந்து நாட்டிற்குப் பணியாற்றுங்கள் இன்று இந்த பிரதேசங்களில் மின்மாற்றிகள் நாசபபடுத்தப்படுகின்றன. எதிரியின் நோக்கம் நாட்டின் முக்கிய நபர்களையும் முக்கிய தளங்களையும் அழித் தொழிப்பதேயாகும். இதை உணர்ந்து கொண்டு பிரதான எதிரிகளை தோற்கடிப்பதற்கு அனைவரும் ஒன்றித்துசெயலாற்றவேண்டும். (அ-5)

# புதிய ஜனநாயக கட்சியின் மே தின நிகழ்வுகள்

(கொழும்பு)

புதிய-ஜனநாயக கட்சி எதிர்வரும் மே தினத்தினை ஹற்றன் நகரிலும் யாழ்ப்பா ணம்-புத்தூரிலும் நினைவு கூரவுள்ளது. யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்தையின் மூலம் அரசியல் தீர்வைக் காண வற்புறுத்தி, பொருளாதார நெருக்கடியைத் தடுத்து வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தக் கோரி, உழைக்கும் மக்களின் உரிமைகளைவலியுறுத்தி, அரசியல்கைதிகளை விசாரணை செய் அல்லது விடுதலை செய் எனக்கோரி, மலையக மக்கள் தமது உரிமைகளை வெகுஜனப் போராட்டப் பாதையில் வென் றெடுக்கும் முனைகளைத் திறக்கவற்புறுத்தி, ஜனநாயக தொழிற் சங்க மனித உரிமைகள் நசுக்கப்படுவதை எதிர்த்து மேற்படி மேதினக் கூட்டங்கள் இடம் பெறும். ஹற்றன் சக்தி மண்டபத்தில் நடை பெறும் மேதினக் கூட்டத்திற்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா தலைமை தாங்குவார். கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல், மலையகப் பிரதேச செயலாளரும் வலப் பனை பிரதேச சபை உறுப்பினருமான ச.பன்னீர் செல்வம், கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ. தேவராஜா உட்பட கட்சி தொழிற் சங்கப் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.

யாழ்ப்பாணம், புத்தூரில் கலைமதி மக் கள் மண்டபத்தில் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் க.தணி காசலம், கா.பஞ்சலிங்கம், பொ.முருகேசு உட்பட தொழிலாளர் விவசாயிகளின் பிரதிநிதிகள் உரையாற்றவுள்ளனர். இக் கூட்டங்களில் புரட்சிகர இசைப் பாடல்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் எனக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார். (அ)

# தராதரச் சான்றிதழ் வழங்கல்

(கொழும்பு)

சிறிய அளவில் கைத்தொழில்களை மேற்கொள்வோருக்கு தராதர சான்றிதழ் களை வழங்குவதற்கு இலங்கை கட்டளைகள் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த சான்றிதழ்களை வழங்குவதற்கு முன்னர் சுகாதாரம் உட்பட சகலவித அம்சங்கள் தொடர்பாகவும் கண்காணிப்புகளும் சோதனைகளும் மேற்கொள்ளப்படுவதாக பணியகத்தின் பணிப்பாளர் வசந்த வீரவர்த்தன தெரி வித்துள்ளார்.

இத்தகைய சான்றிதழ்களைப்பெற விரும்பும் சிறியு கைத்தொழில் நிறுவனங்கள் கட்டளைப்பணியகத்தோடு தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளன. (அ-6)

# ஐரோப்பாவின் சலுகை எமக்கு தேவையில்லை-மத்தியவங்கி ஆளுநர்

(கொழும்பு)

ஐரோப்பா வழங்கி வரும் ஜ.எஸ்.பி. பிளஸ் எனப்படும் வர்த்தக சலுகை இலங் கைக்கு உண்மையிலேயே தேவையில்லை என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் காப்ரல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிபிசி ஊடக நிறுவனத்துக்கு அவர் நேர்காணல் வழங்கிய போது இலங்கையைப் பொறுத்த வரையில் ஜி.எஸ்.பி. பிளஸ் என்பது ஒரு மானியம் போன்ற சலுகை தான் உண்மையில் எங்களுக்கு அது தேவையில்லை என்றார்.

அவரை நேர்காணல் கண்ட ஊட கவியலாளர் அதிர்ச்சியுடன், 'இது மிகவும் முக்கிய மான விடயம் .பல மில்லியன் யூரோ மதிப்பிலான ஆடைகள் ஒவ்வொரு ஆண்டும் ஐரோப்பா வுக்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்து வரும் நிலையில் ஐரோப்பா அளித்த சலுகையை மறுபரிசீலனை செய்ய உள்ளது பற்றி நீங்கள் கவலைப்படவில்லை என்று கூறுகிறீர்களே' என்ற போது அப்படியான ஒரு நேரம் வரும் போது இலங்கை தனது சொந்தக் காலிலே நிற்கும் என்றார்.

இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் இந்த நேர்காணலானது இலங்கை வர்த்தகத் துறை யினரிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-5)

# அழகு தேமல்


நான் ஒரு மாணவன். எனது வயது 18. எனது நெஞ்சிலும், முதுகிலும் வெள்ளை வெள்ளைப் புள்ளிகளாக வெண்தேமல் தோன்றியது. இப்பொழுது தோள்மூட்டுகளுக்கும் ,கழுத்துக்கும் கூடப் பரவிவிட்டது. இது பார்ப்பதற்கு அசிங்கமாகத் தெரிகிறது. கழுத்துக்கும் பரவிவிட்டதால் சேட் அணிந்தாலும் கூட வெளியே தெரிகிறது. இதனை எவ்வாறு ஒழிக்கலாம்.

பதில்: வெண்தேமல் என நீங்கள் குறிப்பிட்டதை மருத்துவத்தில் Pityriasis Versicolor எனச் சொல்வோம். இந்நோயானது எமது தோலில் வழமையாக அழுகல் வளரியாக (Saprophyte) வாழும் ஒரு வகை மதுவம் (Yeast), நோய்க் கிருமியாகப் பரவும் போது ஏற்படுகிறது. இது பெரும்பாலும் உங்களை ஒத்த ஆரோக்கியமான இளம் வாலிபர்களையே அதிகம் பீடிக்கின்றது. நெஞ்சு, முதுகு, கழுத்து, தோள்மூட்டு ஆகிய இடங்களில் அதிகம் பரவுவதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். மேற்கூறிய இடங்கள் நெய்ச் சுரபிகள் அதிகமாக உள்ள இடங்களாகும். அத்தகைய இடங்களிலேயே இந் நோய் அதிகம் பரவுகிறது. முகத்தில் நெய்ச் சுரபிகள் அதிகம் இருந்தாலும், அங்கு வெண்தேமல் பரவுவது குறைவு. தோள்மூட்டிலிருந்து புயங்களுக்கும் கூட இத் தேமல் பரவுவதை சிலரில் காணக் கூடியதாக இருக்கும். எமது நாட்டைப் போன்ற பிரதேசங்களில் வாழ்பவர்களின் கருமையான தோலில், இது வெண்ணிறமான புள்ளிகளாகப் பரவுகிறது. சிலரது சருமத்தில் அழுக்குப் போன்ற புள்ளிகளாகவும் பரவுவதுண்டு. இதனை அழுக்குத் தேமல் என்றும் சொல்வார்கள்.

மேலைநாட்டவரின் வெள்ளைச் சருமத்தில் இது வெளிர்ச்சிவப்பு (Pink) நிறத்தில் படர்கிறது.

உங்களுக்கு வெண்புள்ளிகளாகப் பரவுகிறது என எழுதியிருந்தீர்கள். நிறம் எதுவாக இருந்தாலும் நோய் ஒன்றுதான்.

இந்நோயைக் குணமாக்குவதற்கான மருந்தைப் பொறுத்தவரையில் பல்வேறு விதமான சிகிச்சைகள் நல்ல பலனைக் கொடுக் கின்றன. 25 சதவீதமான செலினியம் சல்பைட் (Selenium Sulphide) என்ற மருந்து விலை குறைவான போதும் நல்ல பலனைக் கொடுக்கிறது. இது தலைப் பொடுகிற்கு உபயோகிக்கும் ஷாம்பூ ஆக மருந்துக் கடைகளில் கிடைக்கிறது. இம் மருந்தை இரண்டுவிதமாகப் பூசலாம்.


தோள்மூட்டில் அழகு தேமல்

முதலாவது முறை -தேமல் உள்ள இடங்களுக்கு, இரவில் மருந்தைப் பூசவும். சற்று ஈரமான தோலில் நுரைக்கும்படி பூசினால் நல்லது. காய்ந்த பின் இரவுமுழுவதும் அப்படியே விட்டுவிட்டு காலையில் கழுவவும். ஒரு வார இடைவெளியில் இதேவிதத்தில், நான்கு தடவைகள் பூச தேமல் மறைந்துவிடும்.

இரண்டாவது முறை- இதுவே இப்பொழுது உலக சுகாதார ஸ்தாபனத்தாலும் சிபாரிசு செய்யப்படுகிறது. மென்மையான தோல் உள்ளவர்களுக்குப் பொருத்தமானது. தேமல் உள்ள பகுதியை நீரினால் ஈரப்படுத்துங்கள் ஈரமான சருமத்தில் மேற்கூறிய மருந்தைப் பூசவேண்டும். தேமலுக்கு மேல் மாத்திரமன்றி அது உள்ள பகுதிகள் முழுவதற்கும் பூச வேண்டும். பத்து நிமிடங்களின் பின் கழுவுங்கள் இவ்வாறு 14 நாட்களுக்கு தொடர்ந்து செய்ய வெண்தேமல் மறைந்துவிடும்.

Miconazole, Ketoconazole, Econ ozole ஆகிய களிம்பு மருந்துகளை தொடர்ந்து ஒரு மாதம் பூசினாலும் இத்தேமல் குண மடையும்.

கடுமையான தொற்றுகளுக்கு Itraconazole மாத்திரைகளை தினமும் 200 mg அளவில் 7நாட்களுக்கு உபயோகிக்க வேண்டும். அல்லது Ketoconazole மாத்திரைகளை 200mg அளவில் இரண்டு நாட்களுக்கு உபயோகித்தாலும் குணமாகும். ஆனால் இவை விலை உயர்ந்த மருந்துகளாகும். மருத்துவரின் ஆலோசனையுடன் மாத்திரம் உட்கொள்ளவேண்டும்.

# யானைத் தடிப்பான்

அண்மையில் நான் நுவரெலியாவிற்கு சென்றிருந்தபோது எனக்கு மேலெல்லாம் சிவப்பு சிவப்பாக திட்டுகள் தோன்றின. கடுமையான சொறிவு ஏற்பட்டது. ஒரு பிரிட்டோன் குளிசை போட்டேன் குறையவில்லை. உடைகளைக் கழற்றிவிட்டு சொறிய வேண்டும் போலிருந்தது. ஆனால் கடும் குளிராதலால் கழற்றமுடியவில்லை. மிகவும் சிரமப்பட்டுவிட்டேன். மறுநாள் காலையில் டாக்டரிடம் காட்டி மருந்து எடுத்தபின்தான் படிப்படியாகக் குறைந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பும் இரு தடவை கள் இவ்வாறு வந்தது. யானைத் தடிப்பான் என சிலர் சொன்னார்கள். உண்மையில் இது என்ன நோய்? இது வராமல் தடுக்க ஆலோசனை கூறுவீர்களா?

பதில்: உங்களுக்கு வந்தது ஏர்ரிக்கேரியா (Urticaria) என்ற நோய் என நம்புகிறேன். இது ஓரளவு பரவலான நோய்தான். நூற்றுக்கு 15பேர் இந்த நோய்க்கு தமது வாழ்நாளில் ஒருமுறையாவது ஆளாகியிருப்பார்கள் எனத் தெரிகிறது. உங்களுக்கு வந்தது போல மேலெல்லாம் சிவந்த திட்டுகள் சொறியுடன் ஏற்படுவதே இந்நோயின் முக்கிய அறிகுறியாகும். திட்டுகள் வட்டமாகவோ, நீளமாகவோ, பல்வேறு வடிவங்களில் தோன்றலாம். ஒவ்வொரு திட்டும் 10-12 மணிநேரத்திற்குள் படிப்படியாக மறையக்கூடும் அதற்கிடையில் வேறு இடங்களில் புதிதாகத் தோன்றலாம்.

வேறு சிலருக்கு மேலெல்லாம் தடிப்பதில்லை. ஆனால் மென்மையான இடங் களில் சிவந்த வீக்கங்களாகத் தோன்றலாம். கண் இமை, வாய், உதடுகள், நாக்கு, ஆணுறுப்பு போன்ற மென்மையான இடங்களில் வீக்கம் போலத் தோன்றுபவற்றை Angio edema என்று சொல்வார்கள். இன்னும் சில ருக்கு தோலை அழுத்தமாகத் தேய்த்தால், அல்லது நகம், கூரான பொருள் போன்றவற் றால் பிராண்டினால் அந்த இடத்தில் கோடு கள் போன்ற தடிப்புத் தோன்றுவதுண்டு. இதனை Dermographism என்று கூறுவார்கள்.

### காரணங்கள்


இவ்வாறு பலவிதமான ஏர்ரிக்கேரியாக்கள் இருக்கின்றன. இவை எவ்வாறு வருகின்றன, இவற்றைத் தடுப்பது எப்படி எனக் கேட்டிருந்தீர்கள். எதனால் இவை ஏற்படுகிறது என கண்டுபிடிப்பது கஷ்டம். உணவுகள், மருந்துகள், உணவுகளுக்கு நிறமும் சுவையும் ஊட்டச் சேர்க்கப்படும் பொருட்கள் போன்ற வை மாத்திரமல்ல கடும் குளிரோ, சூடோ கூட இந்நோய் ஏற்படக் காரணமாகலாம். உதாரணமாக ஒரு சிறு ஐஸ்கட்டியை தோலின் மேல் வைத்தால் ஒரு சிலருக்கு இந்நோய் ஏற்படலாம். உங்களுக்கு ஏற்பட்டது சிலவேளைகளில் கடும் குளிர் காரணமாக இருக்கலாம். அப்படியாயின் நீங்கள் கடும் குளிரைத் தவிர்ப்பது நல்லது.

வேறு சிலருக்கு அஸ்பிரின், குயினின், ஒப்பியம் மருந்து களும் குளோரெட்ராசைக்கிளின் (Chlortetracycline) போன்ற மருந்துகளும் இந்நோயைத் தூண்டலாம். உணவிற்கு மஞ்சள் அல்லது ஒரேஞ்ச் நிறத்தைக் கொடுக்கும் Tartrazine நிறமூட்டியும் இந்நோய்க்கு காரணமாகலாம். உணவைப் பதப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் Benzoates யையும் குறிப்பிடலாம்.

முட்டை வெள்ளைக்கரு, ஸ்ரோபெரி ஆகியவையும் மேக்கரல், ரியூனா போன்ற மீன் வகைகளும் சிலவேளைகளில் யானைத்தடிப்பான் நோய்க்கு காரணமாகலாம். எனவே யானைத்தடிப்பான் வந்தவர்கள் மேற்கூறிய பொருட்கள் ஏதாவது தமது நோய்க்குக் காரணமா என ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் தவிர்க்க விரும்பும் இரசாயனப் பொருட்கள் சில, நாம் வழமையாக உபயோகிக்கும் பொருட்களில் இயற்கையாகக் கலந்திருந்தும் தொல்லை கொடுக்கலாம்.

உதாரணமாக சிலருக்கு சலிசிலிக் அமிலம் என்று சொல்லப்படும் அஸ்பிரின் இந் நோயை உண்டாக்கலாம். எனவே அவர் இம் மருந்து கலந்த Asprin , Disprin, Codis போன்ற பல்வேறு மாத்திரைகளையும், அது கலந்துள்ள களிம்பு மருந்துகளையும் தவிர்க்க வேண்டும். அப்படித் தவிர்த்தும் சிலவேளைகளில் நோய் உண்டாகலாம். ஏனெனில் பல இயற்கையான உணவுகளில் கூட சலிசிலேட் கலந்திருக்கிறது. உதாரணமாக அப்பிள் தோலில் அது கலந்துள்ளதால் அஸ்பிரினைத் தவிர்த்தாலும் கூட யானைத்தடிப்பான் வரலாம். கை வைத்தியத்திலும், சுதேச வைத்தியங்களிலும் உபயோகிக்கும் மருந்துகளாலும் இத்தகைய அறிகுறிகள் ஏற்படலாம்.

சிலவேளைகளில் தைரோயிட் சுரப்பி நோய்கள், புற்றுநோய்கள் (Lymphoma) வைரஸ் ஈரல் அழற்சி, SLE , எயிட்ஸை தோற்றுவிக்கும் ஆரம்பத் தொற்று (HIV Infection) போன்ற வேறு நோய்களின் ஒரு அறிகுறியாகவும் இருப்பதுண்டு. நீங்கள் ஏற்கனவே வைத்தியர் ஒருவரிடம் காட்டி சிகிச்சை பெற்றிருப்பதால், உங்களுக்கு இத்தகைய வேறு நோய்கள் இல்லை என்பதை அவர் நிச்சயப்படுத்தியிருப்பார். எனவே கவலையை விடுங்கள்.


யானைத் தடிப்பான்

### சிகிச்சை

சிகிச்சையைப் பொறுத்தவரை இந்த அறிகுறிகளை ஏற்படுத்தும் காரணிகளை அடையாளம் கண்டுவிட்டால் அவற்றைத் தவிர்ப்பது ஒன்றே நிச்சயமான முறையாகும்.

ஒவ்வாமை எதிர் மருந்துகள் (Antihistamine) நோயைத் தணிக்க உதவும். உதாரணமாக (Chlorpheneramine, Cetrizine, Pheneramine, Terfenadine). சிலவேளைகளில் ஸ்டீரொயிட்ஸ் என்ற வகை மருந்துகளையும் உபயோகிக்க வேண்டியிருக்கும். எதற்கும் வைத்தியரின் ஆலோசனையுடன் உங்களுக்கு ஏற்ற மருந்தை தெரிவுசெய்யுங்கள். அவசரமான வேளைகளில் உபயோகிக்க உதவும்.




டாக்டர் எம்.கே.முருகானந்தன்

# உங்களது நாளாந்த உணவில் கீரையின் பங்களிப்பு



இன்றைக்கு கண்பிரச்சினை, நீரிழிவு நோய் போன்ற நோய்களின் தாக்கம் இல்லாதவர்கள் யாருமில்லை என்று சொல்லும் அளவிற்கு பலவியாதிகள் மனிதர்களை தாக்கி வருகிறது.

நோய்களுக்கான மருந்துகள் எடுத்துக் கொள்வது ஒருபக்கம் என்றாலும் உணவுக் கட்டுப்பாடு தேவை என்பதே எல்லோராலும் சிபார்சு செய்யப்படுகிறது. அந்த வகையில் காய்கறி உணவுகளே நல்லதென்று சொல்லப்படுகிறது. காய்கறி உணவில் கீரைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால் கீரைகளில் உள்ள சத்துக்களை தெரிந்து கொள்வது நல் லது.

### முளைக்கீரை

இதில் சுண்ணாம்புச் சத்துநிறைந்திருப்பதால் எலும்புகள் வலுவடைந்து நன்றாக வளரும். வயிற்றுப் புண்ணை ஆற்றுவதோடு மலச்சிக்கலையும் போக்கக்கூடியது. நீரடைப்பைப் போக்கும். கண் பார்வை தெளிவாகும்.

### பொன்னாங்கண்ணிக்கீரை

பொன்னாங்கண்ணிக்கீரையை சமைத்துச் சாப்பிட்டு வந்தால் உடல் உஷ்ணத்தை தணிப்பதோடு கண் சம்பந்தமான வியாதிகளையும் குணமாக்கும். சொறி சிரங்குகளைப் போக்கும்.

### புதினாக் கீரை

புதினாக்கீரையை சட்னி, துவையலாகச்செய்து பலகாரங்கள் மற்றும் சோறுடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் புதினாத் துவையலை சோறுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் போக்கு நின்றுவிடும்.

இதில் விற்றமின் 'ஏ' மற்றும் 'பி' சத்துக்கள் நிறைந்துள்ளன.

### தரைப் பசளிக் கீரை

மலச்சிக்கலை நீக்கும். சிறுநீர் சம்பந்தப்பட்ட வியாதிகள் குணமாகும். உடல் உஷ்ணத்தைக் குறைத்துவிடும். குளிர்ச்சியான தேகம் உடையவர்கள் இதைச் சாப்பிடக் கூடாது.

### கொடிப்பசளிக் கீரை

உடலுக்கு குளிர்ச்சியைத் தரக்கூடியது. மலச்சிக்கலைப் போக்கும்.

### சிறுகீரை

காசநோயை குணப்படுத்தக்கூடியது. இதற்கு விஷத்தை முறிக்கும் சக்தி உண்டு. சிறுநீர் சம்பந்தமான சகல வியாதிகளும் குணமாகும்.

### வெந்தயக் கீரை

இந்தக் கீரை சுண்ணாம்புச் சத்தும் விற்றமின் ஏ சத்தும் நிறைந்தது. அஜீரணத்தைப் போக்கி பசியை உண்டுபண்ணும். கண் பார்வைக்கு நல்லது. சொறி சிரங்கைப் போக்கும்.



### புளிச்சக் கீரை

வாதசம்பந்தமான எல்லா வியாதிகளையும் இது போக்கக் கூடியது. மலச்சிக்கல் உள்ளவர்கள் இந்தக் கீரையை அடிக்கடி சேர்த்து வந்தால் நாளா வட்டத்தில் மலச்சிக்கல் ஏற்படாத நிலை வந்துவிடும். காச நோயை சமன்படுத்தும்.

### கீரைத் தண்டு

சீதபேதி உள்ளவர்களுக்குக் கொடுத்து வந்தால் சீதபேதி உடனே குணமாகும். பேதியுடன் இரத்தமாகப் போகும் போது இந்தத் தண்டை காரம் சேர்க்காமல் சாப்பிட்டால் இரத்தப் போக்கு நின்றுவிடும்.

### அகத்திக் கீரை

மூளைக் கோளாறுகள் உள்ளவர்கள் அடிக்கடி இதை வேகவைத்துச் சாப்பிட்டு வந்தால் மூளைக் கோளாறு நீங்கும். வாய்ப்புண், வயிற்றுப்புண்ணை ஆற்றும். நீர்ச்சளி யை நீக்கும். நீரடைப்பு போன்ற நோய்களைக் குணப்படுத்தும். நோயாளிகள் மருந்து சாப்பிடும் போது இக் கீரையை சேர்க்கக் கூடாது.

### முருங்கைக் கீரை

இதில் சுண்ணாம்புச் சத்தும் இரும்புச் சத்தும் பொஸ்பரசும் அடங்கியுள்ளன. இக் கீரை பல வியாதிகளையும் தீர்க்கக் கூடிய அருமருந்தாக இருந்து வருகின்றது.

கண் எரிச்சல் தீரும் . கண்பார்வை தெளிவடையும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். தாதுவை விருத்திபடுத்தும். நீரிழிவை நிவர்த்தி செய்யும்.

### கொத்தமல்லிக் கீரை

சுண்ணாம்புச் சத்தும் இரும்புச் சத்தும் நிறையவுள்ளன. இரத்தத்தை சுத்தமாக்கும். மாலைக்கண், சிரங்கு, சொறி, புண் இவைகளைக் குணப்படுத்தும். சிறுநீர் சம்பந்தமான வியாதிகள், கண்சம்பந்தமானவியாதிகள், வாய்ப்புண், வயிற்றுப்புண், உதட்டுப் புண் ஆகியவைகளை ஆற்றக்கூடியது.

### கறிவேப்பிலை

இதில் விற்றமின் ஏ.பி.சி உயிர்ச்சத்துக்கள்நிறையவே உள்ளன. சுண்ணாம்புச் சத்தும் இருக்கிறது. இந்தச் சத்துக்கள் உடல் பலத்தைக் கொடுக்கவும் எலும்புகளுக்குச் சக்தி ஊட்டவும் செய்கிறது. இதையும் துவையலாகச் செய்து சாப்பாட்டுடன் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் நல்லது.

## ஐ.சி.சி ஒருநாள் போட்டி தரவரிசையில்

# கடந்த பத்து ஆண்டுகளில் முதல் முறையாக முரளிதரன் முதல் பத்துக்கு வெளியே

சர்வதேச ஒருநாள் போட்டிக்கான ஐ.சி.சி பந்துவீச்சாளர்கள் தர வரிசையில் இலங்கை அணியின் சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் முதல் பத்து இடங்களில் இருந்து பின் தள்ளப்பட்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் முரளிதரன் முதல்


முரளிதரன்

பத்து இடங்களில் இருந்து பின் தள்ளப்பட்டமை இதுவே முதல் முறையாகும். சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ஒருநாள் போட்டிக்கான தனது தர வரிசை பட்டியல்களை பாகிஸ்தான் - பங்களாதேஷ் தொடர் முடிபடைந்ததன் பின்னர் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் ஒருநாள் அணிகளின் தரவரிசையில் தென்னாபிரிக்கா 127 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும் அதே புள்ளிகளுடன் டெசிமலில் குறைவாக பெற்று அவுஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும் நியூசிலாந்து, இந்திய அணிகள் 113 புள்ளிகளுடன் முறையே 3ஆம், 4ஆம் இடங்களில் உள்ளன.

பாகிஸ்தான் 110 புள்ளிகளுடன் 5-வது இடத்திலும் இங்கிலாந்து, இலங்கை அணிகள் 105 புள்ளிகளுடன் முறையே 6ஆம், 7ஆம் இடங்களில் உள்ளன.

**ஒருநாள் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை**

சிமித் (தெ.ஆ.), டெண்டுல்கர் (இந்.), பொன்டிங் (ஆஸி.), மொகமட் யூசுப் (பாக்.), சந்தர் போல் (மே.தீவு), ஹைடன் (ஆஸி.), ஹசி (ஆஸி.), பீற்றர்சன் (இங்கி.), ஏ.பிடி வில்லியர்ஸ் (தெ.ஆ.) மற்றும் தோனி (இந்.) ஆகியோர் முறையே முதல் பத்து இடங்களில் உள்ளனர்.

**பந்துவீச்சாளர் தர வரிசையில்**

விக்டோரி (நியூ.), பிரக்கன் (ஆஸி.), பொண்ட் (நியூ.), மில்ஸ் (நியூ.), வாஸ் (இல.), நெல் (தெ.ஆ.), பவல் (மே.தீவு), ரெயிலர் (மே.தீவு), பிரட் லீ (ஆஸி.) மற்றும் சைட் அப்ரிடி (பாக்.) ஆகியோர் முதல் பத்து இடங்களில் உள்ளனர். (5)

## பாகிஸ்தானின் அழைப்பை மறுத்தது மேற்கிந்திய தீவுகள்

(கராச்சி)

மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாட பாகிஸ்தான் வரும்படி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை மறுப்புத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மேற்கிந்தியத் தீவுகள் அணியை மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் அழைத்திருந்தது.

அந்த சமயத்தில் கனடாவுடன் ஏற்கனவே கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளமையால் பயணம் சாத்தியமில்லை என்று மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி சௌகத் நக்மீன் தெரிவித்தார். (5)

## ஐ.பி.எல். இருபது -20 தொடர்

# கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இரண்டாவது வெற்றியைப் பெற்றது

(கொல்கத்தா)

கங்குலி தலைமையிலான கொல்கத் தா நைட் ரைடர்ஸ் அணி தனது இரண்டாவது வெற்றியைப் பெற்றது.

இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் நடைபெற்று,வருகிறது. இத் தொடரில் சர்வதேச பிரபலவீரர்கள், உள்ளூர் வீரர்கள் அடங்கிய 8 அணிகள் மோதுகின்றன.

இத் தொடரின் 4ஆவது லீக் ஆட்டத்தில்


டி.ஜே.ஹஸி

கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ்-லக்ஸ்மன் தலைமையிலான டெக்கன் சார்பர்ஸ் ஆகிய அணிகள் நேற்று முன் தினம் கொல்கத்தா ஈடன் காட்னில் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கன் சார்பர்ஸ் அணி 18.4 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 110 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் 32 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் 23 ஓட்டங்களையும் எடுத்தனர். அணித்தலைவர் வி.வி.எஸ். லக்ஸ்மன் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் முரளி கார்த்திக் 3 விக்கெற்றுக்களையும் அகாக்கர் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 111 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெற்றுக்களை மாத்திரமிழந்து 112 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றது.

இதில் டி.ஜே.ஹஸி ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் கங்குலி 14, மொகமெட் ஹபீஸ் 13 ஓட்டங்களையும் எடுத்தனர். உதிரி யாக 28 ஓட்டங்களை வழங்கியது டெக்கன் சார்யர்ஸ் அணி.

பந்துவீச்சில் வாஸ், ஓஜா ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக டி.ஜே.ஹஸி தெரிவானார். இவ் வெற்றிகள் மூலம் தொடரில் இரண்டு வெற்றிகளைப் பெற்று 5 புள்ளிகளை எடுத்துள்ளது. (5)

# ராவிட் அணிக்கு முதல் வெற்றி

(மும்பை)

மார்க் பௌச்சரின் அதிரடியான ஆட்டத்தால் ராவிட் தலைமையிலான பெங்களூர் ரோயல் சலஞ்சர் அணி முதலாவது வெற்றியைப் பெற்றது.

இந்தியன் பிரிமியர் லீக்கின் இருபது -20 தொடரில் நேற்று முன்தினம் 5-வது லீக் போட்டி டெண்டுல்கர் தலைமையிலான மும்மை இந்தியன்ஸ்-ராவிட் பெங்களூர் றோயல் சலஞ்சர் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்மை இந்தியன்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அணித்தலைவர் டெண்டுல்கர் பூரண உடல் தகுதி பெறாமையினால் விளையாடாத நிலையில் அணிக்கு ஹர்பஜன் சிங் தலைமை தாங்கினார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்மை இந்தியன்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது.

இதில் உத்தப்பா 38 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 48 ஓட்டங்களையும் ஜெயசூர்யா 29, பொலக் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜாகீர் கான், அக்கில் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர், மார்க் பௌச்சரின் அதிரடியான ஆட்டத்தால் 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் மார்க் பௌச்சர் 19 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர் உட்பட) 39 ஓட்டங்களையும் ராவிட் 32 ஓட்டங்களையும் கலிஸ் 25 ஓட்டங்களையும் மற்றும் ரெயிலர், ஹோலி ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் நாயகனாக மார்க் பௌச்சர் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் றோயல் சலஞ்சர் அணிக்கு 2 புள்ளிகள் வழங்கப்பட்டது.

இதேவேளை ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர் அணி முதலாவது லீக் போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸிடம் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# இருபது-20 போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி

## பங்களாதேஷ் சோகம்


மிஸ்பா உல் ஹக்

(கராச்சி)

இருபது-20 போட்டியிலும் பாகிஸ்தான் அணி 102 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பங்களாதேஷ் அணி 5 ஒரு நாள் போட்டிகள் ஒரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் 5 ஒருநாள் போட்டிகளிலும் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி தொடரை முழுமையாகக் கைப்பற்றியது.

இந்நிலையில் அணிகளிற்கிடையிலான இருபது-20 போட்டி நேற்று முன்தினம் கராச்சியில் நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மிஸ்பா உல் ஹக்கின் சிறப்பான ஆட்டத்தினால் 20 ஓவர்கள் முடிபில் 5 விக்கெற்றிழப்பிற்கு 203 ஓட்டங்களையெடுத்தது.

இதில் மிஸ்பா உல்ஹக் ஆட்டமிழக்காமல் 53 பந்துகளில் (3 பௌண்டரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட) 87 ஓட்டங்களையும் யூனிஸ்கான் 47 ஓட்டங்களையும் சொகைப் மலிக் 35 ஓட்டங்களையுமெடுத்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 204 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 16 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களை மிழந்து 101 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 102 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் நஸிமுடின் 42 ஓட்டங்களையும் தமீம் இக்பால் 23 ஓட்டங்களையும் மொகமெட் அஷ்ரபுல் 13 ஓட்டங்களைமெடுத்தனர். ஏனைய வீரர்கள் இரட்டை இலக்கைப் பெறாமலே ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் மன்சூர் அம்ஜாட் 3 விக்கெற்றுக்களையும் தான்வீர், மலிக், அப்ரிடி மற்றும் ரீஸா ஆகியோர் தலா ஒரு விக்கெற்றை வீழ்த்தினர். ஒரு போட்டியை மாத் திரம் கொண்ட ''இருபது-20'' தொடரையும் பாகிஸ்தான் அணி தனதாக்கியது.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் மிஸ்பா உல் ஹக் தெரிவானார். (5)

பிறரின் ஏழ்மையையும் நையாண்டிகளையும் கண்டு முதலில் ஆனந்தம் அடைகின்ற நாம் கடைசியில் நாமே நையாண்டி செய்யப்படுகிறவர்களாக ஆகி விடுகிறோம்.

-பிளேட்டோ

வலம்புரி

## தென்பகுதிச் சீமான்களே நீவிரும் அரிசிக்கு அலைகிறீரோ!

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை அரசு விதித்ததன் காரணமாக தென்பகுதி மக்கள் இப்போது அரிசிக்கு அலைகின்றனர்.

அரிசி விற்பனையாளர்கள் அரிசியை பதுக்கி விட்டதால் அரிசித் தட்டுப்பாடு தென்பகுதியில் உச்சம் பெற்றுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்து மக்கள் அரிசிக்காக வரிசையில் நின்ற கதைபோய், தற்போது தென்பகுதி மக்கள் அரிசிக்காக வரிசையில் கால்கடுக்க காத்திருக்கும் கட்டம் வந்துவிட்டது.

இன்று எனக்கெனில் நாளை உனக்கென்ற இறைவனின் செயல் தற்போது மிக வேகமாக அமுலாகிக் கொண்டிருக்கிறது.

இதன் விளைவே தென் பகுதியில் நிலவும் அரிசிக்கான தட்டுப்பாடாகும்.

யாழ்ப்பாணத்து மக்கள் அரிசியில்லை. ஒரு நேர உணவுக்கு அவலப்படுகின்றோம் என, அவலக்குரல் எழுப்பியபோது, யாழ்ப்பாணத்தாரின் குரலுக்கு காது கொடுப்பது தேவையற்ற விடயம், அதற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற நிலைப்பாட்டை தென் பகுதி மக்கள் கொண்டிருந்தனர்.

ஆனால் இன்று அவர்களே அரிசியில்லை என அலறும் பரிதாபம் இத்துணை விரைவாக ஏற்படுமென எவரும் எதிர்பார்க்கவில்லை.

இத்தகைய மோசமான நிலைக்குக் காரணம் அரசின் யுத்தமோகமென்பதை சிங்கள மக்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் யுத்தம் நடந்தால் அது யுத்தம் இடம் பெறும் பிரதேச மக்களை மட்டுமே பாதிக்கும் என்ற நினைப்பு குருட்டுத்தனமானது.

நீண்டகாலமாக இடம்பெறும் யுத்தம் ஒட்டு மொத்தமாக நாடு பூராகவும் பாதிப்பை ஏற்படுத்தும், பொது விலைமட்டத்தின் தொடர்ச்சியானதும்,வேகமானதுமான அதிகரிப்பு, பண வீக்கத்தை தோற்றுவித்துவிடும்.

உற்பத்திக் குறைவும் அதிகரித்த விலையும் பொதுமக்களின் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கி பட்டினிச்சாவை ஏற்படுத்தும்.

எனினும் அடிப்படைப் பொருளியல் அறிவை கொண்டிராத அமைச்சர்களும், அரசியல் வாதிகளும், நாட்டைப் பாதுகாப்பதற்காக யுத்தச் செலவை மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றனர்.

அதிலும் பேராசிரியர் பீரிஸ் அவர்கள் நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது, அவல மரணங்கள் - கடத்தல் சம்பவங்கள் நிகழ்வது சாதாரணமானவை எனக் கூறியிருந்தார்.

அப்படியானால் அவரின் கூற்றிலிருந்து சிங்களப் புத்திஜீவிகளின் உள்ளார்ந்தமான முடிபு என்ன? என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இவை மட்டுமே அரசின் யுத்த செலவின் கொடை என்றால் கூட அதனைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் யுத்தத்தின் ஆரம்ப விளைவையே தென் பகுதி மக்கள் இப்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். போகப் போகத்தான் அதன் உக்கிரம் வேகமெடுக்கும்.

அப்போது தென்பகுதி மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவர். அந்தப் போராட்டம் நாட்டில் பஞ்சத்தை -யுத்தத்தை ஒழிக்கிறதோ இல்லையோ நாட்டின் இறையாண்மையை நிச்சயம் சீரழித்துவிடும்.

# அரசுடன் இணைந்த ஐ.தே.க எம்.பிக்கள் மீண்டும் கட்சியில் இணைவது குறித்து பேச்சு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்துள்ள அமைச்சர்களான காமினி லொக்குகே, மிலிந்த மொறகொட,லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, மனோ விஜேரத்ன ஆகியோர் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைவது குறித்து எம்முடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். என காமினி லொக்கு எம்.பி தகவல் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்டவர்களின் குழுவொன்று மீண்டும் கட்சியில் இணைந்து கொள்வதற்காக பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது. இதன் விபரங்கள் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் நால்வருடனான பேச்சுவார்த்தை தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிவிக்கப்பட்டே நடத்தப்பட்டன. கட்சியின் சார்பில் நானும் எம்.பிக்களான ரஞ்சித் மத்துமபண்டாரரவிசமரவீர ஆகியோரும் கலந்து கொண்டோம்.

கட்சியில் மீண்டும் இணைந்து செயற்படுவதற்கு விரும்பினால் கதவுகள் திறந்தே உள்ளன. திறந்த மனதோடு பேச்சுக்களை நடத்தி நிபந்தனைகள் எதுவுமின்றி இணைந்து கொள்ள முடியும் எனவும் அறிவித்தோம்.

இதன்போது அவர்களது தரப்பிலிருந்து சில விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அதனை தற்போது வெளியிட முடியாது அவர்களது கருத்துக்களை தலைவரிடம் சமர்ப்பித்துள்ளோம். அடுத்தகட்ட நடவடிக்கையை தலைவர் மேற்கொள்வார் நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

சிங்கள தமிழ் புதுவருட விடுமுறைகள் வந்ததால் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவில்லை. எது எப்படியாயினும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னர் கட்சித் தலைவர் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வார் என அவர் மேலும் கூறினார். (அ)

# இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வு சாத்தியம் என்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரன

(கொழும்பு)

ஒற்றையாட்சிக்குள் அமைந்த அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் பிரித்தானியாவுக்கான விஜயத்தின்போது நாம் இதனை அறிந்து கொண்டோம் இது குறித்து ஆராய சர்வகட்சிக்குழு மீண்டும் இவ்வாரம் கூடவுள்ளது என்று சர்வகட்சிக்குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

சர்வகட்சிக்குழுவின் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு இனப்பிரச்சினை தீர்வுகாண தீர்வு திட்டம் குறித்து ஆராய்ந்திருந்தனர். இந்த விஜயம் குறித்து கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும்கூறியதாவது,

பிரித்தானியாவுக்கு நாம் மேற்கொண்டிருந்த விஜயம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. எமது நாட்டில் இடம் பெற்று வருகின்ற தீர்க்க முடியாத பிரச்சினையாக உரு வெடுத் திருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பிரித்தானிய அரசாங்கத்திற்கு வட அயர்லாந்தின் பிரச்சினைகள் பாரிய தலை யிடியாக மாறியிருந்தன.

இதனைத் தீர்ப்பதற்கு அந்த அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைதான். சமஷ்டியல்லாத ஒற்றையாட்சிக்குள் அமைந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டமாகும். இதன் மூலம் வட அயர்லாந்து பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை நல்லதோர் உதரணமாகக் கொள்வதன் மூலம் இலங்கையிலும் ஒற்றையாட்சிக்குள் அமைந்த அதிகாரப் பரவலாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் இனப்பிர்சினைக்கான தீர்வினைக் காண முடியும் இது தொடர் பாக ஆராய்வதற்கென இவ்வாரம் சர்வ கட்சிக்குழு கூடவுள்ளது. (அ-5)

# சூழ்ச்சித்திட்டம் தீட்டியவர்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்குகிறது

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜே.வி.பியின் தேசிய மாநாட்டில் விமல் வீரவன்ச எம்.பி.யும் அவருடன் இருப்பவர்களும் கலந்து கொள்ளலாம். அதற்கு எதுவிதமான தடையும் விதிக்கப்படவில்லை அவர்களது பதவிகளிலும் மாற்றங்கள் செய்யவில்லை. சூழ்ச்சித் திட்டத்தை கட்சிக்குள் தீட்டியவர்களுக்கு அரசாங்கம் பிரதமர் பாதுகாப்பு பிரிவின் பாதுகாப்பையும் அரச ஊடக அனுசரணையும் வழங்கி வரு கின்றது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ் சாட்டினார்.

விமல் வீரவன்ச தொடர்பாக ஜே.வி.பியின் தற்போதைய நிலை என்ன? என்று கேட்ட போதே பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார்.

விமல் வீரவன்சவும் எம்.பியும் அவருடன் இணைந்துள்ள ஒரு சிலரும் நீண்ட காலமாக கட்சிக்குள் மேற்கொண்ட சூழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பாடே பாராளு மன்ற உரையும் பிரிவுமாகும். இதில் சிலர் தமது குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வெளியேறியுள்ளனர். ஏனையோர் விஷயம் புரியாது வெளியேறியுள்ளனர்.

தற்போது பலருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் மீண்டும் கட்சியுடன் இணைவார்கள் விமல் கட்சிக்கு எதிராக செயற்பட்டுள்ளார். ஒன்று கட்சிப் பிரச்சினையை பாராளுமன்றத்திற்கு கொண்டு சென்றது. இரண்டாவது கட்சி யாப்பிற்கு எதிராக கட்சியை பிளவுபடுத்தியமை இது போன்ற பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது இருக்கின்றன.

அது தொடர்பாக கட்சியின் அரசியல் சபைக்கு சமூகமளித்து விளக்கமளிக்கலாம் அதைவிடுத்து நாட்களைக் கடத்தினால் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலை உருவாகும்.

அத்தோடு பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியோ பிரசாரச் செயலாளர் பதவியோ இதுவரையில் வேறொருவருக்கு வழங்கப்படவில்லை.

விமலுக்கும் அவரின் குழுவுக்கும் அரசாங்கம் பாதுகாப்பு வழங்குகிறது பிரதமரின் பாதுகாப்பு பிரிவினரின் பாதுகாப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு அரச ஊடகங்களில் அவர்களுக்கு முக்கியத்துவமும் வழங்கப்பட்டுள்ளது. இது எமது கட்சியை பலவீனப்படுத்த முயலும் அரசாங்கத்தின் செயற்பாடாகும்.

எமது கட்சி வரலாற்றில் எத் தனையோ சவால்களை சந்தித்துள்ளது. அதன் பெறுபேறாக சிறு பின்னடைவுகளை அவ்வப்போது சந்தித்துள்ளோம் இதுவும் அவ்வாறானதொரு பின்னடைவாகும்.

கடந்த காலங்களில் விமலுக்கு பல்வேறு பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு கையளித்தேன். ஆனால் பல பொறுப் புக்கள் அவரால் நிறைவேற்றபடவில்லை வேண்டுமென்றே கைவிடப்பட்டது.

இவ்வாறு பல நாட்கள் கட்சிக்குள் மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சி சதித்திட்டமே திடீரென வெளிக்கிளம்பியுள்ளது. எனவே எமது ஆதரவாளர்கள் உண்மையைப் புரிந்து கொண்டுள்ளனர் என்றும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (அ-5)

# கைதிகளை வெளியே அழைத்து செல்ல விஷேட பாதுகாப்புப் பிரிவு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் கைதிகளை வெளியில் அழைத்துச் செல்வதற்காக விஷேடபாதுகாப்புப்பிரிவு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளிலிருந்து கைதிகளை வெளியில் அழைத்து செல்கையில் விஷேடமாக இந்த பாதுகாப்பு பிரிவினரின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது. என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர விஜய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த பாதுகாப்பு பிரிவுக்கு விஷேட பயிற்சி பெற்ற சிறைச்சாலை அதிகாரிகளை ஈடுபடுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-6)

ஓலைச் சுவடிகள் 18

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

## நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**கோயில் தரிசனத்துக்கு ஈரத்துணி உடுப்பதனால் என்ன பயன்?**

ஈரத்துணி உடுத்தால் அது வயிற்றுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறுவதுண்டு. குளித்து ஈரத்துணி உடுத்து கோயில் தரிசனம் செய்யும் போது பூரணபரிசுத்தம் மட்டுமே அதிலிருந்து எதிர்பார்க்கின்றோம் என்று கருதி வருகின்றோம்.

ஒரு சிலர் குளித்து ஈரத்துணியுடன் கோயில் தரிசனம் செய்வதையும், கோயிலை வலம் வருவதையும் கண்டிருப்பீர்கள்.

இவ்வாறு செய்வதனால் வயிற்றுக்குத் தீங்கு என்ற நம்பிக்கையை பலர் கொண்டுள்ளனர். ஆனால் ஈரத்துணி உடுப்பதனால் தீமையல்ல நன்மையே உண்டாகின்து. நாம் உண்ணும் உணவிலிருந்தும் மற்றும் குடிக்கும் நீரிலிருந்தும் ஏராளம் நோயணுக்கள் மற்றும் விஷப்பொருட்கள் உட்செல்கின்றன என்பதை பழைய காலத்திலிருந்தே நாம் அறிந்துள்ளோம். இவ்வகை விஷப்பொருட்களால் உணவு ஜீரணம் பாதிக்கப்படுகின்றது. சரியான ஜீரணம் நடக்காதிருப்பதனால் மலக்கழிவு சரியாக நடப்பதில்லை இதனால் மலம் சரியாகக் கழியவில்லையானால் வயிற்றுக்குள் வெப்பம் ஏற்படும். இதனால் பல நோய்கள் வரலாம். ஈரத்துணி உடுத்து கோயில் தரிச னம்செய்வதன் காரணம் வயிற்றின் வெப்பத்தைக் குறைப்பதற்கேயாகும். இதை இன்றைய நவீன மருத்துவத்துறையும் ஒரு சிகிச்சையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

# பிளவுக்கு காரணமானவர்களை நீக்கினால் பேச்சுக்குத் தயார்

## விமல் வீரவன்ச கருத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கு காரணமானவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றினால் கட்சித் தலைமையுடன் எந்நேரமும் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மல்வத்தை அஸ்கிரிய மாநாயக்கர்களை நேற்றுச் சந்தித்ததன் பின்னர் அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் ,

ஐக்கிய தேசியக் கட்சியின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த இரண்டொருவரினால் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது.

அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றி அதற்கு பதிலாக தன்னோடு இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சிக்குள் பங்களிப்பு செய்வதற்கு ம.வி.முக்குள் இடம் இருக்குமாயின் கட்சித் தலைமைத்துவத்துடன் நிலவும்பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் தயார்.

கட்சித் தலைமையுட்பட அக்குழுவினர் இதுவரை பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வதற்கான அனைத்து வழிகளையும் தடை செய்யும் வகையிலேயே செயற்படுகின்றனர்.

நமது குழுவினர் ஒழுக்கக் கட்டுப்பாட்டோடு செயலாற்றும் போது மற்றக் குழுவினர் பல்வேறு குறைபாடுகளைச் சுமத்தி வன்முறைகளை தூண்டி விட்டு செயற்பட்டு வருவதோடு கட்சிக்குள் நிலவும் தமது குழுவினருக்கு தெரிந்த தகவல்களைக் கூட தங்களுக்கே வெளிப்படுத்தாமல் இருக்கின்றனர் என்றார். (ச)

## அடிகளாரின் கொலைக்கு தேசிய சமாதான பேரவை கவலை

வடக்குக் கிழக்கு மனித உரிமை செயலகத்தின் தலைவர் அருட்தந்தை எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளார் கிளைமோர்க் குண்டுத் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தும் இரக்கமற்ற செயல் என தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

இனவன்முறைகளின் போது மனிதாபிமான பணிகள், மனித உரிமைகள், ஆன்மிகப் பணிகளில் ஈடுபடுபவர்கள் படுகொலை செய்யப்படும் வரிசையில் கருணாரட்ணம் அடிகளாரின் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் சமாதானத் திட்டங்கள், ஆய்வுகளில் இவர் ஈடுபட்ட இவர் மீதான இந்தக் கொடூரமான செயலை யார் செய்தாலும் நாட்டை நேசித்த ஒரு உறவுப் பாலத்தை பலி கொண்டு விட்டதாகவும் தேசிய சமாதானப் பேரவைக்கு இது ஒரு பேரிழப்பாகும்எனத்தெரிவித்துள்ளது. (ச-2)

## கருணாரட்ணம்...

நடைபெறவுள்ளது.

இதேவேளை கருணாரட்ணம் அடிகளாருக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளதாக யாழ்.ஆயர் இல்லத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## கருணாரட்ணம் அடிகளாரின் கொலைக்கு...

தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கின்றது.

மக்களின் நலனுக்காகவும் மனித உரிமை நிலைமையினை மேம்படுத்துவதற்காகவும் எப்போதும் உழைத்து வந்த ஒரு செயற்பாட்டாளரை இலங்கை அரசாங்கம் வேண்டும் என்றே இலக்கு வைத்திருக்கின்றது.

மக்கள் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பணிப்போடு செயற்பட்டு வந்த இத்தகையதொரு தொண்டனை கோரமாகக் கொலை செய்தமையின் ஊடாக மனித உரிமையினை மதித்துச் செயற்படுவதில் தான் எந்தளவுக்கு இழிநிலையில் இருக்கின்றது என்பதனை அரசாங்கம் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கின்றது.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மனித உரிமைஆர்வலர்களையும் இலக்கு வைத்துத் தாக்குதல் நடாத்தும் அரசினது செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மனித உரிமை மீறல்களில் தொடர் ந்தும் ஈடுபட்டு வரும் அரசாங்கத்தி னது இத்தகைய போக்கினை சர்வதேசமனித உரிமை அமைப் புக்களும் சர்வதேச நாடுகளும் வன்மையாகக் கண்டிப்பதோடு இது போன்ற மோசமான மனித உரிமை மீறல்களில் தொடர்ந்தும் ஈடுபடாமல் இருப்பதற்கு அரசிற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென்று கோருகின்றோம்.

தமது இளம் வயது முதல் மக்கள் பணியில் ஈடுபட்டு வந்த கருணாரட்ணம் அடிகளாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கருணாரட்ணம் அடிகளாரின்...

யாழ்.மறைமாவட்டம் முழுவதுமே அதிர்ச்சியிலும் சோகத்திலும் உறைந்துபோயுள்ளது.

துன்பத்தில் வேதனையுறுவோரின் தேவைகளில் பணிபுரிபவரும் அடிப்படை மனித உரிமை. மீறல்கள் நடைபெறும்போது துணிந்து குரல் கொடுப்பவருமான இவரின் இறப்பு யாழ். மறை மாவட்டத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இவரின் இறப்பால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அனைவருக்கும் யாழ்.மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகளின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இக் கொடூர செயலை யார் செய்திருந்தாலும் எந்த நோக்கத்திற்காகச் செய்திருந்தாலும் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது போன்ற செயல்களைச் சம்பந்தப்பட்ட அனைவரும் விட்டு விலகி தமிழ் மக்கள் அனைவரும் அமைதியிலும் சமாதானத்திலும் வாழ வழிவகுக்கும் ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடும்படி அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என்றுள்ளது. (ச)

## முல்லைத்தீவில் விமானத் ...

(வயது-18) என்பவர் பலியாகி உள்ளார். விசுவமடு, உழவனூரைச் சேர்ந்த தியாகராசா(வயது-48); மணற்குடியிருப்பு, முல்லைத்தீவை சேர்ந்த கிரிசாளினி(வயது-8); 8ஆம் யூனிற் தருமபுரத்தை சேர்ந்த சுதாகரன் (வயது-22); வண்ணாங்குளத்தைச் சேர்ந்த ஜீவரட்ணம் (வயது-65);கள்ளப்பாடு, முல்லைத் தீவைச் சேர்ந்த லக்சனா(வயது-5); பொக் கணையைச் சேர்ந்த கனிஸ்ரன்(வயது-17); மணற்குடியிருப்பைச் சேர்ந்த அன்ரனி ஜெ ராட் (வயது-42); தீர்த்தக்கரையைச் சேர்ந்த சத்தியநாதன்(வயது-42) ஆகியோரே காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விமானக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான நினைவு மையம் ஆழிப் பேரழையால் அழிந்த சூசையப்பர் கோவில் நினைவு மையமாக மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கையில் ஐ.நாவின்...

ஐ.நாவின் செயற்பாடுகள் பக்கச் சார்பானவை என்றும் அவர்கள் விடுதலைப் புலிகளின் நலன்களை கருத்தில் கொண்டு செயல்பட்டு வருவதாகவும் இலங்கை அரசாங்கம் தனது இணையத்தளங்கள் மூலமாக பரப்புரைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளை மோசமாக பாதிக்கும் என்பதோடு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதாபிமானபணிகளைஇடை நிறுத்தும் நிலைக்கு இட்டுச் செல்லக் கூடுமென்று பெயர் குறிப்பிட விரும்பாத ஐ.நாவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## வெளிநாட்டுத் தலை...

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் பீற்றர் ஹெய்ஸ் நேற்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்றுக் காலை பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் ஜே.வி.பியின் சார்பில் எம்.பிக்களான விஜித்த ஹேரத், இராமலிங்கம் சந்திரசேகரன், பிமல் ரத்னாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணியிலிருந்து 11.30 மணிவரை இரு மணி நேரம் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது இலங்கை இனப்பிரச்சினைக்கான விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்து சோமவன்ச அமரசிங்க விளக்கிக் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் குறைபாடுகளை முன்வைத்து அவற்றிற்குப் பரிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கவும் நஷ்டஈடு வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு விசேட ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று சோமவன்ச அமரசிங்க பேச்சுவார்த்தையின்போது தெரிவித்துள்ளார்.

எப்படி எனினும் இலங்கையின் உள்நாட் டுப் பிரச்சினையில் வெளிநாட்டுத் தலையீடுகளை எதிர்க்கின்றோம். அதேநேரம் விடுதலைப்புலிகளைப் பலவீனமடையச் செய்வதற்குப் பிரிட்டனும் ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரவு வழங்கினால் ஆதரிப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மூலமான செய்திகள் ஊடாகவே ஜே.வி.பி. தொடர்பாக இதுவரை காலம் அறிந்து வைத்திருந்ததாகவும் இன்று நேரில் பேச்சு நடத்த சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியதாகும் என்றும் பிரிட்டன் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (ச-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses... Full Time Classes
*Computerized Accounting **INDIVIDUAL Classes
(Tally, Accpack, MYOB, QuickPro)
** MS Office **DTP *V.B., .net
* Hardware ** Internet & Email
* Video Editing *AutoCAD *ICT *GIT
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
*Sun Certified Java Programmer
Degree Course * BIT Semester 1,2,4 & 6
பதிவுகள் 25.04.2008 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி–தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
30-04-2008 முன் நேரில்
2007 BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP


## மரண அறிவித்தல்கள்

### அருட்திரு. எம்.சேவியர் கருணாரட்ணம் அடிகளார்



அருட்திரு. எம். சேவியர் கருணாரட்ணம் அடிகளார் நேற்று முன்தினம் 20.04.2008இல் வவுனிக்குளத்தில் அகாலமரணமடைந்தார். இவர் அருட்திரு. M.ஞானரட்ணம் (உரோமாபுரி) அவர்களின் அன்புச் சகோதரன் ஆவார்.

இவரின் திருவுடல் இறைமக்களின் அஞ்சலிக்காக கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் வைக்கப்பட்டு இன்று 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு வவுனிக்குளம் புனித வேளாங்கன்னி ஆலய வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ்.பேராலயத்தில் இன்று 22 ஆம் திகதி மாலை 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ்வறிவித்தலை குருக்கள், துறவிகள், இறைமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்,
குருமுதல்வர், யாழ்.மறை மாவட்டம்.

(C-1052)

### திருமதி கிருஷ்ணர் செல்லம்மா

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணர் செல்லம்மா நேற்று 21.04.2008 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணரின் அன்பு மனைவியும், தனேஸ்வரி கணேசலிங்கம்(ஜேர்மனி), குகேஸ்வரி (திருகோணமலை), சரோஜினி (ஆசிரியை, இருபாலை கந்தவேள் இ.த.க பாடசாலை), உஷா (ஜேர்மனி), சூட்டி ( ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் மகேந்திரன் (தபால் ஊழியர், கோண்டாவில்), சுந்தரலிங்கம், குணராஜா, கவின் செல்வன் (ஜேர்மனி), சுடர்விழி ( ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் கஜீனா, சரண்யா, சஞ்சீவன், பேபிநிஷா, ஹம்சிகா, ஜேனுசிகா, சபிரா, ஜோசுபா, சோபியா, பியங்கா, வாஸ்கியான் ( ஜேர்மனி ) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (22.04.2008) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டப்பிராய் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்;
மகேந்திரன்
(மருமகன்)

(C-1053)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1, இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.